# 25.09.2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண மன்றக்கூட்ட தீர்மானங்கள்

**ம.அ.9.ந.க.எண்.இ2/5715/2026**

**ஆணையர் அவர்களின் 31.08.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 308/2026** **பொருள் எண்.01**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9, வார்டு-115, தூரப்பா தெருவில் பழுதடைந்த நிலையில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியை இடித்து அகற்ற அனுமதி.**

வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண்.33/2026-27, நாள்.17.07.2026ன்படி, மன்றத்திற்கான ஒப்புதலுக்காக கீழ்காணும் வகையில் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | மண்டலம்-9 | வார்டு-115 |
|---|---|---|
| 1 | இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-9, பகுதி-27, வார்டு-115 தூரப்பா தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப்பள்ளிக் கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 1939 ஆம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | 385.66 சதுர மீட்டர் (தரைதளம்)<br>385.66 சதுர மீட்டர் (முதல் தளம்) |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு? | 385.66 சதுர மீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.51,575.34/- |
| 6 | அந்த கட்டிடம் தற்போது பயன்பாட்டில் உள்ளதா? | ஆம் |
| 7 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | இக்கட்டிடத்தின் மேற்கூரையில் ஏற்பட்ட விரிசல் காரணமாக மழைநீர் கசிவுகளால் மேற்கூரையின் இரும்பு கம்பிகள் துரு ஏற்பட்டு இக்கட்டிடம் மிகவும் சிதிலமடைந்து உள்ளது. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | உதவிக் கல்வி அதிகாரி மற்றும் 9-வது மண்டல வார்டு குழு பரிந்துரை |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | வார்டு குழு/மண்டலம்-9ன் தீர்மான எண்.33 நாள்:17.07.2026 |

எனவே, மண்டலம்-9, பகுதி-27, வார்டு-115 சூரப்பன் தெருவில் அமைந்துள்ள பழுதடைந்த நிலையில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"15.09.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தில் தீர்மான எண்.27/2026, நாள்.15.09.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"18.09.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.64/2026, நாள்.18.09.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**வ.வ.வ.செ.ப.ம.நக.எண்.பிசி / 117 / 2026**

**ஆணையர் அவர்களின் 26.07.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 309 / 2026** **பொருள் எண்.02**

**பெருநகர சென்னை மாநகராட்சி - வடக்கு வட்டாரம் - வடசென்னை வாகன பணிமனை மற்றும் மண்டலம் 1 முதல் 5 லாரி நிலையம் மற்றும் இதர பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்கள் ஆகியவற்றிக்கு டீசல் கொள்முதல் செய்தல் - தற்பொழுது மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் இரட்டை விலை விகிதங்கள் - மொத்த கொள்முதல் (Bulk consumer price) ரூ.113.59 எனவும் சில்லறை விற்பனை விலை (Retail price) ரூ.92.39/- எனவும் நிர்ணயித்துள்ளன - பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பு - ஆயில் நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கு கொள்முதல் செய்ய அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டது -மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம் 1 முதல் 5 லாரி நிலையங்கள், கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாக உபகரணங்கள், சிறப்பு வாகனங்கள் மற்றும் வட சென்னை வாகன பணிமனை வாகனங்கள் ஆகிய இடங்களில் உள்ள வாகனங்கள் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி துப்புரவு பணி, துப்புரவு பணி அல்லாத இதர பணிகளுக்காக தோராயமாக 241 எண்ணிக்கையிலான பல்வேறு வகையான கனரக / இலகுரக காம்பேக்டர் வாகனங்கள் / டிப்பர் லாரிகள்/ தண்ணீர் லாரிகள் / முன்பளு தூக்கி உபகரணம், புல்டோசர், ஹைட்ராலிக் எக்ஸ்கவேட்டர் மற்றும் ஆய்வு வாகனங்கள் மற்றும் இதர வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட வாகனங்களுக்கு தேவையான எரிபொருள் (டீசல்) கீழ்கண்ட லாரி நிலையம் மற்றும் வட்டார பணிமனைகளில் அமைக்கப்பட்டுள்ள எரிபொருள் வழங்கு நிலையம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

| வ. எண் | மண்டல லாரி நிலையம் / பிரதான பணிமனை | எரிபொருள் நிரப்பும் வாகன விவரம் | நாளொன்றுக்கு தோராயமாக வழங்கப்படும் எரிபொருளின் மொத்த அளவு |
|---|---|---|---|
| 1. | வடக்கு வட்டார பிரதான பணிமனை | மண்டலம் 1,2, 5 சார்ந்த வாகனங்கள் மற்றும் இதர பயன்பாடுகள் | 4400 லிட்டர்கள் |
| 2. | மண்டலம் 4 லாரி நிலையம் | மண்டலம் 3 மற்றும் 4 சார்ந்த வாகனங்கள் மற்றும் இதர பயன்பாடுகள் | 2950 லிட்டர்கள் |

மேலும் இவை தவிர மண்டலங்கள் 1 முதல் 5 வரையுள்ள அனைத்து துறை அலுவலக அதிகாரிகளின் ஆய்வு வாகனங்கள், கொசு மருந்து புகை பரப்பும் பணிகளுக்கான வாகனங்கள், அலுவலகங்கள் மற்றும் மருத்துவமனைகள் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் ஜெனரேட்டர்கள் மற்றும் மழைக்காலங்களில் நீர் இறைக்கும் பம்புகள் ஆகியவற்றிற்கு தேவையான எரிபொருள் மேற்கண்ட நிலையங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

டீசல் கொள்முதல் செய்ய, 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மான எண்.92/*2000* நாள்.28.02.2000 அனுமதியின்படி, அரசின் பின் ஏற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண்.102 நாள்.07.08.2000ல் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத் தீர்மான எண். 486/01, நாள்.18.09.2001.-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் வட்டார பணிமனை மூலம் மன்றத்தின் அனுமதி பெற்று டீசல் சம்பந்தப்பட்ட மத்திய அரசு எண்ணெய் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக மொத்த கொள்முதல் விலையில் வாங்கப்பட்டு வருகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வட சென்னை வாகன பணிமனையில் இயக்கப்படும் டீசல் பங்கிற்கு திருவாளர்கள். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் மூலமும் மற்றும் மண்டலம் 4ல் இயக்கப்படும் பங்க்கிற்கு திருவாளர்கள். இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் மூலமும் கொள்முதல் செய்ய மாமன்றத்தின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆணை பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆயில் நிறுவனங்கள் டீசல் மொத்த கொள்முதல் விலையினை லிட்டர் ஒன்றுக்கு ரூ.113.59/- என நிர்ணயித்துள்ளன. இது சந்தை விலையான லிட்டர் ஒன்றுக்கு ரூ.92.39/- என்பதைவிட ரூ.21.20/- கூடுதலாகும். இவ்விலை ஏற்றத்தின் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நேரடியாக மத்திய ஆயில் நிறுவனங்கள் மூலம் மொத்த கொள்முதல் விலையில் டீசல் வாங்கும் பட்சத்தில் நாளொன்றுக்கு சுமார் 7350 லிட்டர் கொள்முதல் செய்ய கூடுதலாக ரூ.1,55,820/- வீதம் ஒரு மாதத்திற்கு ரூ.46,74,600/- செலவு செய்யும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் இந்நிதி இழப்பினை தவிர்க்க நேரடியாக மத்திய அரசு ஆயில் நிறுவனங்களிடமிருந்து மொத்த கொள்முதல் விலையில் கொள்முதல் செய்வதை தவிர்த்து இந்நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சந்தை விலையில் கொள்முதல் செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டது.

மேலும், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்ய ஏற்கனவே மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில் தற்போதைய விலை ஏற்றத்தினை கருத்தில்கொண்டு ஆயில் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதற்கு மாற்றாக இந்நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கு தேவைக்கேற்ப அந்தந்த எரிபொருள் வழங்கு நிலையம் மூலம் கொள்முதல் செய்து நிதி இழப்பினை தவிர்க்கலாம் எனவும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

எனவே, தற்போதைய எரிபொருள் தேவையினை தீர்வு செய்ய கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு 2026-2027 ஆம் நிதி ஆண்டிற்கான முன்பணத்தினை அந்தந்த எண்ணெய் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு முன்பணம் செலுத்தி சில்லறை விற்பனை விலையில் டீசல் கொள்முதல் செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டது.

| வ. எண் | மண்டல லாரி நிலையம் / பிரதான பணிமனை | எரிபொருள் நிரப்பும் வாகன விவரம் | நாளொன்றுக்கு தோராயமாக வழங்கப்படும் எரிபொருளின் மொத்த அளவு | எண்ணெய் நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| 1. | வடக்கு வட்டார பிரதான பணிமனை | மண்டலம் 1,2, 5 சார்ந்த வாகனங்கள் மற்றும் இதர பயன்பாடுகள் | 4400 லிட்டர்கள் | திருவாளர்கள் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் |
| 2. | மண்டலம் 4 லாரி நிலையம் | மண்டலம் 3 மற்றும் 4 சார்ந்த வாகனங்கள் மற்றும் இதர பயன்பாடுகள் | 2950 லிட்டர்கள் | திருவாளர்கள் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் |

எனினும், தமிழ்நாடு அரசு சட்டமன்ற தேர்தல் நடத்தை விதிமுறைகள் கடந்த 15.03.2026 முதல் அமலில் இருந்த நிலையில் மேற்படி முன்மொழிவிற்கான மாமன்றத் தீர்மானம் பெற இயலாத நிலை ஏற்பட்டது. எனினும் துப்புரவு வாகனங்கள் மற்றும் தேர்தல் வாகனங்களின் எரிபொருள் தேவையினை கருத்தில் கொண்டும், மாநகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டும், அவசரம் மற்றும் அவசியம் கருதி, மன்றத்தின் பின்னேற்பு ஆணையை எதிர்நோக்கி அந்தந்த எண்ணெய் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு முன்பணம் செலுத்தி சில்லறை விற்பனை விலையில் டீசல் கொள்முதல் செய்ய ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு ஆணை பெறப்படல் வேண்டும்.

எனவே,

1. வடக்கு வட்டாரம், மண்டலம் 1 முதல் 5 வரையுள்ள மண்டலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கும், கொசு மருந்து தெளிக்கும் பணி மற்றும் இதர துறை சார்ந்த பணிகளுக்கும் தேவைப்படும் டீசலை மத்திய அரசு ஆயில் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு வரும் நிலையில் ஆயில் நிறுவனங்கள் மொத்த கொள்முதல் விலையினை சில்லறை விற்பனை விலையினைவிட அதிகரித்துள்ளதால், இந்நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதை தவிர்த்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர் நோக்கி இந்நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலையில் தேவைக்கேற்ப அந்தந்த வட்டார பணிமனை மூலம் கொள்முதல் செய்து பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
2. வட்டார பணிமனைகள் 2025-26 மற்றும் 2026-27 நிதி ஆண்டில் நேரடியாக மொத்த கொள்முதல் விலையில் டீசல் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையால் ஏற்படும் நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டு ஏற்கனவே பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியின் மூலம் மத்திய அரசின் ஆயில் நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விலையில் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
3. இந்நடைமுறையினை (சில்லறை விலையில் கொள்முதல் செய்தல்) மொத்த நேரடி கொள்முதல் விலை, சில்லறை விலையினைவிட குறையும் வரை மேற்கொள்ளவும்,
4. *2026*-27 நிதி ஆண்டிற்கு தேவையான டீசல் கொள்முதலுக்குத் தற்போதைய விலை ஏற்றத்தின் காரணமாக அந்நிறுவனங்களிடமிருந்து எரிபொருள் கொள்முதல் செய்ய இயலாத நிலையில் தற்போதைய எரிபொருள் தேவையினை தீர்வு செய்ய, இந்நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கு தேவைக்கேற்ப வடக்கு வட்டார பணிமனை மூலம் முன்பணம் வழங்கி கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
5. மத்திய அரசு ஆயில் நிறுவனங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள முன்பணத் தொகையினை மீளப்பெற கால தாமதம் ஏற்படும் என்பதால் அதற்கான நடவடிக்கையினை வடக்கு வட்டார பணிமனை மூலம் நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

6. மத்திய அரசு எண்ணெய் நிறுவனங்களால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் சில்லறை விற்பனை விலைக்கே இந்நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலம் வழங்க முடியும் என்பதால் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து தேவைகளின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு முன்பணம் வழங்கி நேரடியாக சில்லறை விலைக்கு கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
7. ஒவ்வொரு ஆண்டும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசலை, இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ளலாம் என அரசு நிரந்தர ஆணை அளித்துள்ளதால், அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல்செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“18.09.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.077/2026, நாள்.18.09.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து, மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ந.து.ந.க.எண்.D1/PPA/WDCN05/00340/2026**

**ஆணையர் அவர்களின் 19.08.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 310/2026** **பொருள் எண்.03**

## தானப்பத்திரம்

மண்டலம்-05, கோட்டம்-58ல் The Association of St.Christopher's College of Education Rep by Secretary Mrs.Dr. Nithila Devakarunyam அவர்கள் Door No.63, 64, 65, 66, E.V.K. Sampath Road, Vepery, Chennai - 600007 in R.S.No.681, 682, Block No.16 of Vepery Villageல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN05/00340/2026, நாள்:20.01.2026ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-05ல் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்தப் பரப்பளவு 16318.00ச.மீ. ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 16.36மீ அகல E.V.K. Sampath Road அமைய பெற்றுள்ளது. E.V.K. Sampath Road சென்னை பெருநகர முழுமை வளர்ச்சி திட்டம் IIன்படி 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 40.46ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் The Association of St.Christopher's College of Education Rep by Secretary Mrs.Dr. Nithila Devakarunyam அவர்களிடமிருந்து Door No.63, 64, 65,66, E.V.K. Sampath Road, Vepery, Chennai - 600007 in R.S.No.681, 682, Block No.16 of Vepery Village, Division - 58, Zone - 05ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 40.46ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "22.09.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.36/2026,நாள்.22.09.2026ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**ந.து.ந.க.எண்.D1/00013/2026**

**ஆணையர் அவர்களின் 14.08.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 311/2026** **பொருள் எண்.04**

## தானப்பத்திரம்

மண்டலம்-05, கோட்டம்-62ல் Mrs. Rajkumar மற்றும் 2 நபர்கள் Door No.95/46, Swamy (N) Street, Chintadripet, Chennai 600002, Comprised In S.No.622 Block No.12 of Chintadripet Village, Chennai Districtல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN05/02844/2026, நாள்: 25.05.2026ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-05ல் விண்ணப்பித்துள்ளார்கள். விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 133.00ச.மீ ஆகும். விண்ணப்பதாரர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 11.30மீ அகல Swamy (N) Street, அமையபெற்றுள்ளது. Swamy (N) Street, சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமை திட்டத்தின்படி 15.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர்கள் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர்கள் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 14.61ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர்கள் Mr.Rajkumar மற்றும் 2 நபர்களிடமிருந்து Door No.95/46, Swamy (N) Street, Chintadripet Chennai 600002, Comprised In S.No.622, Block No.12 of Chintadripet Village, Chennai District, Division - 62, Zone - 05ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 14.61ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"22.09.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.37/2026,நாள்.22.09.2026ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ந.து.ந.க.எண்.D1/00011/2026**

**ஆணையர் அவர்களின் 31.08.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 312/2026** **பொருள் எண்.05**

## தானப்பத்திரம்

மண்டலம்-05, கோட்டம்-63ல் Mrs.Jannath Ali. S அவர்கள் New Door No.227, Old Door No.99, Bharathi Road, (Pycrafts Road) Royapettah, Chennai 600014, Comprised In R.S.No.1133/17, Block No.25 of Triplicane Village, Chennai Districtல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN05/02992/2026, நாள்:04.06.2026ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-05ல் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 212.11ச.மீ ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 15.90மீ அகல Bharathi Road, (Pycrafts Road) அமையபெற்றுள்ளது. Bharathi Road, (Pycrafts Road) சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமை திட்டத்தின்படி 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 33.50ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mrs.Jannath Ali. S அவர்கள் New Door No.227, Old Door No.99, Bharathi Road, (Pycrafts Road) Royapettah, Chennai 600014, Comprised In R.S.No.1133/17, Block No.25 of Triplicane Village, Chennai District, Division - 63, Zone - 05ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 33.50ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “22.09.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.38/2026,நாள்.22.09.2026ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**<u>ந.து.ந.க.எண்.D1/0006/2026</u>**

**<u>ஆணையர் அவர்களின் 22.07.2026 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்: 313/2026** **பொருள் எண்.06**

## <u>தானப்பத்திரம்</u>

மண்டலம்-06, கோட்டம்-71ல் (1) Dr. S.V. Subash (2) Dr.B. Rajeswari அவர்கள் New Door No.195, Old Door No.41A, Melpatti Ponnappan Mudali Street, Perambur, Chennai - 600011 comprised in T.S.No.792/208, Block No.45 of Perambur Villageல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN06/08576/2025, நாள்:28.12.2025ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-06ல் விண்ணப்பித்துள்ளார்கள். விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 223.00ச.மீ ஆகும். விண்ணப்பதாரர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 17.68மீ அகல Melpatti Ponnappan Mudali Street அமையபெற்றுள்ளது. Melpatti Ponnappan Mudali Street சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமை திட்டத்தின்படி 24.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர்கள் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர்கள் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 24.00ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர்கள் (1) Dr.S.V.Subash (2) Dr.B.Rajeswari அவர்களிடமிருந்து New Door No.195, Old Door No.41A, Melpatti Ponnappan Mudali Street, Perambur, Chennai - 600011 comprised in T.S.No.792/208, Block No.45 of Perambur Village, Division-71, Zone-06ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 24.00ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "22.09.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.39/2026,நாள்.22.09.2026ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**<u>ந.து.ந.க.எண்.A5/PPA/WDCN06/02643/2026</u>**

**<u>ஆணையர் அவர்களின் 19.08.2026 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்: 314/2026** **பொருள் எண்.07**

## <u>தானப்பத்திரம்</u>

மண்டலம்-6, கோட்டம்–73ல் Mr.R.Mohammed Tajuddin அவர்கள் New Door No.110, Old Door No.67, Decastar Road, Puliyanthope, Chennai 600012, Comprised In T.S.No.114/47&114/127, Block No.3 of Perambur Village, Perambur Taluk, Chennai Districtல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN06/02643/2026, நாள்:13.06.2026ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-6ல் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்தப் பரப்பளவு 239.71ச.மீ. ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 13.00மீ அகல Decastar Road அமைய பெற்றுள்ளது. Decastar Road சென்னை பெருநகர முழுமை வளர்ச்சி திட்டம் IIன்படி 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 6.00ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mr.R.Mohammed Tajuddin அவர்களிடமிருந்து New Door No.110,Old Door No.67 Decastar Road, Puliyanthope Chennai 600012, Comprised In T.S.No.114/47&114/127, Block No.3 of Perambur Village, Perambur Taluk, Chennai District, Division-73, Zone–6ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 6.00ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"22.09.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.40/2026,நாள்.22.09.2026ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**<u>ந.து.ந.க.எண்.D1/SD/WDCN12/00248/2026</u>**

**<u>ஆணையர் அவர்களின் 14.08.2026 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்: 315/2026** **பொருள் எண்.08**

## <u>தானப்பத்திரம்</u>

மண்டலம்-12, கோட்டம்-156ல் Mr.Sundaramoorthy அவர்கள் S.No.36/6B of Mugalivakkam Village, Alandur Talukல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனை உட்பிரிவு அனுமதி வேண்டி SD/WDCN12/00248/2026, நாள்:07.05.2026ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

விண்ணப்பதாரர் Mr. Sundaramoorthy மனை உட்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

(அ) Mr. Sundaramoorthy என்பவர் மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 1850.00சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்காக 270.90 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) Mr. Sundaramoorthy என்பவர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, வட்டாட்சியர், மதுரவாயல் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்.

(இ) மனைஉட்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் Mr. Sundaramoorthy அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கான 270.90சதுர மீட்டர் நிலத்தை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(ஈ) மனை உட்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலை சீரமைப்புக்கு தேவையான தோராய அபிவிருத்தி கட்டணம் விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்க வேண்டும்.

எனவே, S.No.36/6B of Mugalivakkam Village, Alandur Taluk, Division - 156, Zone-12ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைஉட்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கான 270.90சதுர மீட்டர் நிலத்தை Mr.Sundaramoorthy அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"22.09.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.41/2026,நாள்.22.09.2026ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ந.து.ந.க.எண்.D1/SD/WDCN14/00284/2026**

**ஆணையர் அவர்களின் 14.08.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 316/2026** **பொருள் எண்.09**

## தானப்பத்திரம்

மண்டலம்-14, கோட்டம்-188ல் Mr. K. Gajendran அவர்கள் S.No.150/4 as per patta S.No.150/4B1A of Madipakkam Village, Sholinganallur Talukல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனை உட்பிரிவு அனுமதி வேண்டி SD/WDCN14/00284/2026, நாள்:25.05.2026ன்படி, விண்ணப்பம் அளித்துள்ளார்.

விண்ணப்பதாரர் Mr.K. Gajendran மனைஉட்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

(அ) Mr.K. Gajendran என்பவர் மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, நிலத்தின் மொத்தப் பரப்பளவு 1682.00சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்காக 472.00 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) Mr. K. Gajendran என்பவர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ) மனைஉட்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் Mr.K.Gajendran அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கான 472.00சதுர மீட்டர் நிலத்தை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(ஈ) மனைஉட்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலை சீரமைப்புக்கு தேவையான தோராய அபிவிருத்தி கட்டணம் விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்க வேண்டும்.

எனவே, S.No.150/4 as per patta S.No.150/4B1A of Madipakkam Village, Sholinganallur Taluk, Division - 188, Zone - 14ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கான 472.00சதுர மீட்டர் நிலத்தை Mr.K. Gajendran அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "22.09.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.42/2026,நாள்.22.09.2026ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.து.ந.க.எண்.அ1/1042/2026**

**ஆணையர் அவர்களின் 11.09.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 317/2026** **பொருள் எண்.10**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மன்றத்துறை - மாமன்ற உறுப்பினர்கள் திரு.ஆர்.ஜி.ராஜேஷ் சேகர்,வார்டு எண் - 21, திரு.பராஜன், வார்டு எண் - 23, திரு.வி.கிரிதரன், வார்டு எண் - 148 மற்றும் திரு.நா.சுந்தரம், வார்டு எண் - 198 ஆகியவர்கள் - சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் உறுப்பினர்களாக நியமனம் செய்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது - இவ்விவரம் மன்றத்தின் தகவலுக்காகவும், பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.**

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (நவ3(2) துறை, அரசாணை (நிலை) எண்.161, நாள்.27.08.2026ல். 1971ஆம் ஆண்டு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் விதி (9)ஏ(2)எ (இ) *i & ii* இன் கீழ் கீழே குறிப்பிடப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி, மாமன்ற உறுப்பினர்களை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர்களாக நியமனம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பெயர் | வார்டு எண் | மண்டலம் |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.ஜி.ராஜேஷ் சேகர்<br>மாமன்ற உறுப்பினர் | 21 | மண்டலம்-2 |
| 2 | திரு.பராஜன்<br>மாமன்ற உறுப்பினர் | 23 | மண்டலம்-3 |
| 3 | திரு.வி.கிரிதரன்<br>மாமன்ற உறுப்பினர் | 148 | மண்டலம்-11 |
| 4 | திரு.நா.சுந்தரம்<br>மாமன்ற உறுப்பினர் | 198 | மண்டலம்-15 |

எனவே, மேற்படி அரசாணை மற்றும் சட்ட விதிகளின்படி மேற்காணும் பெருநகர சென்னை மாநகராட்சியின் நான்கு மாமன்ற உறுப்பினர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள விவரம், நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின், தகவலுக்காகவும், பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

> "22.09.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.170/2026, நாள்.22.09.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**பொ.து.ந.எண்.ஜி7 / 019020 / 2026**

**ஆணையர் அவர்களின் 18.09.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 318/2026** **பொருள் எண்.11**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம்-2026னை 01.07.2026 முதல் 30.06.2031 வரை ஐந்து ஆண்டுகளுக்கு நடைமுறைபடுத்தி அரசாணை வெளியிடப்பட்டது - மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு காப்பீட்டு நிறுவனத்துடன் நேரிடையாக ஒப்பந்தம் மேற்கொள்வதற்கு முதலாவது தவணை தொகை செலுத்தப்பட்டது - மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

தமிழ்நாடு அரசு, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு பல்கலைகழகங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் நலன் கருதி *2008* ஆம் ஆண்டு முதல் புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் தொடரப்பட்டு நடைமுறையில் உள்ளது.

அரசாணை எண்.*160*, நிதி (ஊதியம்) துறை, நாள் *29.06.2021*-ல் புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் *2021*ன்படி பணியாளர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு ரூ.5.00 இலட்சம் வரை குறிப்பிட்ட உடல் நல குறைவுக்கு வைக்கப்பட்டிருந்த வரையறையை ரூ.10 இலட்சமாக உயர்த்தி ஆணையிட்டு நான்கு ஆண்டுகளுக்கு *(01.07.2021* முதல் *30.06.2025)* நடைமுறைபடுத்தப்பட்டது. பின்னர் மேற்படிதிட்டம் மேலும் ஓராண்டு காலத்திற்கு *(01.07.2025* முதல் *30.06.2026* வரை*)* நீட்டிக்கப்பட்டது.

அரசு ஊழியர்கள் மற்றும் அவர்களது தகுதியான குடும்ப உறுப்பினர்களுக்கு, பணச்செலவில்லா மருத்துவ வசதியை வழங்கும்பொருட்டு, ஏற்கனவே அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் *-2021, 30.06.2026* உடன் முடிவடைந்ததை தொடர்ந்து, இத்திட்டத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம், 2026ல் அமல்படுத்தி ஆணையிடப்பட்டது.

புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம், *2026*ல் உள்ள காப்பீட்டு விவரங்கள் மற்றும் வசதிகள் கீழே தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

**1. காப்பீட்டு காலம் :**

அரசாணை (நிலை) எண்.*122*, நிதி (மருத்துவக் காப்பீட்டு) துறை, நாள்.*24.06.2026*ல், மருத்துவ காப்பீட்டு வசதியானது, *01.07.2026* முதல் *30.06.2031* வரையிலான *5* வருட தொகுப்பு ஆண்டிற்கு வழங்கப்படும்.

**2. காப்பீட்டு தொகை :**

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் *2026*'-இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளின் விவரம் *(Annexure-II)* இணைப்பு-*II*-இல் பட்டியலிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வரும் அரசுத் துறை ஊழியர்கள் மற்றும் தகுதியுள்ள அவர்களது குடும்பத்தினர், 'இணைப்பு-*I*'-இல் பட்டியலிடப்பட்டுள்ள *(PUBLISHED ON THE NHIS PORTAL)* அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள்/அறுவை சிகிச்சைகளுக்கு, 'தொகுப்பு கட்டண

முறை' *(Package Rate)* அடிப்படையிலான பணமில்லா மருத்துவச் சேவையைப் பெறலாம். இதற்கான நிதி உதவி வரம்பு, *01-07-2026* முதல் *30-06-2031* வரையிலான ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கு ரூ.*7.50* லட்சம் (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம்) வழங்கப்படும்.

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்-*2026*இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் அரசு ஊழியர்கள் மற்றும் தகுதியுள்ள அவர்களது குடும்பத்தினர், சிகிச்சைகள்/அறுவை சிகிச்சைகளுக்கு, 'தொகுப்பு கட்டண முறை' *(Package Rate)* அடிப்படையிலான பணமில்லா மருத்துவச் சேவையைப் பெறலாம்.

மேலும், இவ்வாணையின் இணைப்பு *I*-இல் பட்டியலிடப்பட்டுள்ள நோய்களுக்கான மருத்துவ உதவித் தொகை ரூ.7.5 இலட்சம் வரையிலும், இணைப்பு *I-A*-இல் பட்டியலிடப்பட்டுள்ள குறிப்பிட்ட நோய்களுக்கான உதவித்தொகை ரூ.12.00 இலட்சம் (ரூபாய் பன்னிரண்டு இலட்சம்) வரை வழங்கப்படும்.

**3. காப்பீட்டு சந்தா தொகை :**

புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம்- *2026*ல் நபர் ஒருவருக்கு ரூ.*4500/-* ஆண்டு சந்தா செலுத்தப்படவேண்டும். மேலும், 12 இலட்சத்திற்கு கூடுதலாக ஏற்படும் மருத்துவ செலவினங்களுக்கு கூடுதலாக ரூ.15 இலட்சம் வரை நிதியுதவி வழங்கும் பொருட்டு உறுப்பினர்களிடமிருந்து கூடுதலாக மாதம் ரூ.*15/-* வீதம் ஆண்டுக்கு ரூ.*180/-*கொண்டு ஒரு கார்பஸ் நிதி *(Corpus Fund)* ஏற்படுத்தவும்.

புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம்- *2026*ல் மாதாந்திர சந்தா ரூ.*390/-* (ரூபாய் முன்னூற்று தொண்ணூறு மட்டும்) *(Rs.375/- Subscription for NHIS + Rs.15/- contribution for corpus fund)* ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படவேணடும் எனவும், அவ்வப்போது செலுத்தப்பட வேண்டிய காப்பீடுத் தொகையில் ஏற்படும் கூடுதல்/அதிகப்படியான கட்டணம் சம்பந்தப்பட்ட அரசு / உள்ளாட்சி நிறுவனங்களே ஏற்கவேண்டும்.

புதிய மருத்துவ காப்பீடு திட்டம், *2021* வரை அனைத்து அரசு அலுவலகங்கள் / உள்ளாட்சி அமைப்புகள் / அரசு பல்கலைகழகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அரசால் நேரிடையாக காப்பீடு நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் *30.06.2026* அன்றுடன் முடிவுற்றதால், தற்போது புதியமருத்துவ காப்பீடு திட்டம், *2026* ஆனது அரசுப் பணியாளர்களுக்கு மட்டுமே செயல்படுத்திடவும், அரசுக்கு நிதிச் சுமை ஏற்படுத்தாது இத்திட்டத்திற்கான செலவினங்கள் தனியே ஏற்கும் திறன் பெற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் உள்ளாட்சி அமைப்புகளின் பணிபுரியும் அலுவலர்கள்/பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்திட சம்மந்தப்பட்ட நகராட்சி/மாநகராட்சி அரசால் நிர்ணயிக்கப்பட்ட சந்தா தொகையினை செலுத்தி நேரிடையாக காப்பீட்டு கழகத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவும் ஒப்பந்தம் செய்யப்பட்ட நாள் முதல் இத்திட்டம் நடைமுறைக்கு வரும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி தகவல் தொழில்நுட்ப மையத்திலிருந்து பெறப்பட்ட ஜூலை 2026 நிலவரப்படியான 2021 ஆம் ஆண்டு திட்டத்தின் படி சந்தா தொகை பிடித்தம்

செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 12047 ஆகும். புதிய மருத்துவ காப்பீடு திட்டம் *2026*-ன்படி சந்தா தொகை கீழ்கண்டவாறு :

| | |
|---|---|
| ஜூலை 2026 நிலவரப்படி இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களின் எண்ணிக்கை | *12047* |
| *SUBSCRIPTION FOR NHIS*-க்கான ஆண்டு சந்தா தொகை ரூ.375/- வீதம் ஆண்டிற்கு ரூ.*4500/-* | ரூ.5,42,11,500/- |
| *GST 18%* | ரூ. 97,58,070/- |
| மொத்தம் (காப்பீடு சந்தா தொகை) | ரூ.6,39,69,570/- |
| முதல் ஆண்டிற்கான (01.07.2026 முதல் 30.06.*2027)* வருடாந்திரக் காப்பீட்டுக் கட்டணத்தில் 95 சதவீதத்தை இடைக்காலத் தொகையாகச் செலுத்த வேண்டும். | ரூ.6,07,71,092/- |
| கார்பஸ் நிதி *(CORPUS FUND)* -க்கான சந்தா தொகை ரூ.15/- வீதம் ஆண்டிற்கு ரூ.180/- | ரூ.*21,68,460/-* |

இத்திட்டத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி முதலாம் ஆண்டு சந்தா தொகையில் 95% செலுத்தி காப்பீடு நிறுவனம், *UNITED INDIA INSURANCE COMPANY LIMITED, CHENNAI*, நேரிடையாக ஒப்பந்தம் செய்யலாம். சந்தா தொகை ரூ.4500/- பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படுவதால், *GST* தொகை ஆண்டு தோறும் தோராயமாக ரூ.97.60 இலட்சம் பெருநகர சென்னை மாநகராட்சியால் செலுத்தப்படவேண்டும்.

எனவே, ஏற்கனவே நடைமுறையில் உள்ள இத்திட்டத்தினை புதிய வழிகாட்டுதலின்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு கீழ்கண்ட 1 முதல் 10 வரை உள்ள இனங்களின் மீது ஆணையரது ஆணை பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டமைக்கு, நிலைக்குழு (வரி விதிப்பு (ம)நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. அரசாணையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விரிவுபடுத்தப்பட்ட புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம்-*2026*னை பெருநகர சென்னை மாநகராட்சியில் மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்கு உட்பட்டு நடைமுறைப்படுத்திடவும்,

2. அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு திருவாளர் UNITED INDIA INSURANCE COMPANY LIMITED, CHENNAI,யுடன் நேரடியாக ஒப்பந்தம் செய்துக்கொள்ளவும்,

3. இத்திட்டத்திற்கு நிதி நிர்வாகப் பிரிவில் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம்-26ன் நிதிக்கான உரிய கணக்கு குறியீடு தலைப்பு ஏற்படுத்தி நிதி ஒதுக்கீடு செய்யவும்,
4. புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம்-2026க்கான ஆண்டு சந்தா தொகை சரக்கு(ம)சேவை வரி முன்பண செலவின தொகையினை ஆண்டுதோறும் ஒப்பந்தம் செய்யப்படும் மாதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து நிதி நிர்வாக பிரிவின் மூலம் காசோலை பெற்று அரசாணையின் வழிகாட்டு விதிகளின்படி செலுத்திடவும்,
5. அலுவலர்கள்/பணியாளர்களிடமிருந்து மாதந்தோறும் ரூ.390/- (Rs.375/- Subscription for NHIS + Rs.15/- contribution for corpus fund) வீதம் ஜூலை 2026 மாதம் முதல் பிடித்தம் செய்திடவும்,
6. சரக்கு (ம) சேவை வரி தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து செலுத்தவும்,
7. இத்திட்டம் தொடர்பாக அவ்வப்போது செலுத்தப்படவேண்டிய காப்பீடுத் தொகையில் ஏற்படும் கூடுதல்/அதிகப்படியான கட்டணங்களை பெருநகர சென்னை மாநகராட்சி நிதியில் மேற்கொள்ளவும்,
8. Corpus fund–க்கென பணியாளர் / உறுப்பினர்களின் ஊதியத்தில் மாதந்தோறும் பிடித்தம் செய்யப்படும் ரூ.15/- தொடர்பாக அரசிடம் இருந்து உரிய வழிமுறை வழங்கிடும் பொழுது அதனை செயல்படுத்திடும் வரையில் அந்நிதியினை நிதி நிர்வாக பிரிவின் மூலம் பராமரித்திடவும்,
9. இத்திட்டத்தின் தொடர்பாக வெளியிடப்படும் அரசாணைகள், வழிகாட்டுதல்களை ஆணையர் அவர்களின், ஆணை பெற்று செயல்படுத்தவும்,
10. ஆண்டு தோறும் இணை/துணை ஆணையர் (வ(ம)நி) அவர்களின் ஆணை பெற்று கணக்கிடப்படும் சந்தா தொகைகளை காப்பீடு நிறுவனம் மற்றும் கார்பஸ் நிதியில் செலுத்தவும்,

“22.09.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.174/2026, நாள்.22.09.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.1.வதுந.க.எண்.ஆர்2/1755/2026**

**ஆணையர் அவர்களின் 15.09.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 319/2026** **பொருள் எண்.12**

**பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - பொது சந்தை வளாகம் (Public Market) மண்டலம் – 1, பகுதி-2, வார்டு-9, பட்டினத்தார் கோயில் தெரு அங்காடி - வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலகம் – 1, திருவொற்றியூர், பகுதி-2, வார்டு-9ல் அமைந்துள்ள பட்டினத்தார் கோயில் தெருவில் ஏற்கனவே இயங்கி வந்த பொது சந்தை வளாகம் (Public Market) பழுதடைந்ததால், அக்கட்டிடம் முற்றிலும் இடிக்கப்பட்டு, உங்கள் தொகுதியில் முதல்வர் என்ற திட்டத்தில் புதிதாக பொது சந்தை வளாகம் கட்டிமுடிக்கப்பட்டது.

மேற்படி பொது சந்தை வளாகத்தில் தற்போது 300 கடைகள் அமைக்கப்பட்டு சராசரியாக 49 மற்றும் 51 சதுர அடி பரப்பளவில் கடைகள் அமைக்கப்பட்டுள்ளது.

**இக்கடைகளின் விவரம் பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளது :-**

| வ. எண். | கடைகளில் முன்பு மேற்கொள்ளப்பட்ட வியாபாரம் | தற்போது அமைக்கப்பட்டுள்ள கடைகளின் எண்ணிக்கை | தற்போதைய கடைகளின் பரப்பளவு |
|---|---|---|---|
| 1 | முதல் முகப்பு வாயில் | 5 | 49 சதுர அடி |
| 2 | மளிகை, காய்கறி, பழங்கள், பூ மற்றும் இதர வகையான வணிகங்கள் | 175 | 51 சதுர அடி |
| 3 | மீன் அங்காடி | 120 | 24 X 5 மீட்டர் (BAY) |

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, திருத்தப்பட்ட விதி 78 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023, விதி எண்.316-ன்படி அருகாமையிலுள்ள சந்தை மதிப்பின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்திட வரையறுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு சந்தை மதிப்பின் அடிப்படையில் சராசரியாக சதுர அடி ஒன்றுக்கு ரூ.21/- முதல் ரூ.30/- வரை என்ற விகிதத்தில் வாடகை செலுத்துவதை கள ஆய்வில் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. அவ்வாறே சதுர அடிக்கு ரூ.30/- என்ற அடிப்படை மதிப்பினை கொண்டு இக்கடைகளுக்கு வாடகை நிர்ணயிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

மேற்படி பொது சந்தை வளாகம் காலகாலமாக வியாபாரம் செய்து வரும் வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்கி அவர்களுக்கு கடைகளை ஒதுக்கலாம். அவ்வாறு ஒதுக்கும் தருணத்தில் அவர்கள் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய பழைய நிலுவை வரி /

கட்டணம் / வாடகை வசூலித்து, விதி எண்.316(11)-ன் கீழ் ஒதுக்கலாம். அவ்வாறு வியாபாரிகளுக்கு ஒதுக்கப்பட்டு மீதமுள்ள கடைகளை கண்டறிந்து அதனை விதி எண்.293-ன் படி *Tamil Nadu Transparency in Tenders Act, 1998 (Tamil Nadu Act 43 of* 1998) நடவடிக்கையினை தொடரலாம்.

எனவே,

| | |
|---|---|
| (அ) | மண்டல அலுவலகம் – 1, திருவொற்றியூர், பகுதி-2, வார்டு-9ல் அமைந்துள்ள பட்டினத்தார் கோயில் தெருவில் ஏற்கனவே இயங்கி வந்த பொது சந்தை வளாகம் (Public Market) பழுதடைந்ததால், அக்கட்டிடம் முற்றிலும் இடிக்கப்பட்டு, உங்கள் தொகுதியில் முதல்வர் என்ற திட்டத்தில் புதிதாக கட்டப்பட்ட பொது சந்தை வளாகத்தினை பயன்பாட்டிற்கு கொண்டு வந்து சதுர அடி ஒன்றுக்கு மாத வாடகையாக ரூ.30/- என தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023, விதி எண்.316 (6)–ன் கீழ் நிர்ணயம் செய்யவும், |
| (ஆ) | தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, திருத்தப்பட்ட விதி 78 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023, விதி எண்.316-ன் கீழ் நிபந்தனைகள் விதித்து முன்பணம் வசூலிக்கவும், |
| (இ) | பொது சந்தை வளாகம் காலகாலமாக வியாபாரம் செய்து வரும் வியாபாரிகளுக்கு முன்னுரிமையினை வழங்கி அவர்களுக்கு இக்கடைகளை பழைய நிலுவை வரி / கட்டணம் / வாடகை வசூலித்து அவர்களுக்கு விதி எண்.316(11)–ன் கீழ் ஒதுக்கீடு செய்யவும், |
| (ஈ) | ஏற்கனவே வியாபாரம் செய்துவந்த வியாபாரிகளுக்கு கடைகள் ஒதுக்கிய பின்பு மீதமுள்ள கடைகளை கண்டறிந்து, அதனை விதி எண்.293-ன் படி Tamil Nadu Transparency in Tenders Act, 1998–ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளவும், |

மேற்கண்ட அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“22.09.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.171/2026, நாள்.22.09.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.10.வ.பி.ந.க.எண்.ஆர்1/726372/2026**

**ஆணையர் அவர்களின் 09.09.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 320/2026** **பொருள் எண்.13**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10, கோட்டம்- 142, வரசித்தி விநாயகர் கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015ல் மாண்பு மிகு சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி உறுப்பினர் நிதியின் கீழ் சமூக நலக்கூடம் பெருநகர சென்னை மாநகராட்சியால் கட்டப்பட்டு தற்பொழுது பொது மக்கள் பயன் பெறும் வகையில் உள்ளது - இந்த சமூக நலக்கூடத்திற்கு வாடகை மற்றும் முன் வைப்புத்தொகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, செயற்பொறியாளர், மண்டலம் 10 அவர்களின் 11.02.2026 நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-10 கோட்டம் 142, பகுதி-30, வரசித்தி விநாயகர் கோயில் தெரு, சென்னை-600015ல் அரசு புறம்போக்கு நிலத்தில் சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் சமுதாய நலக்கூடம் கட்டி முடிக்கப்பட்டு பொது மக்கள் சுப நிகழ்ச்சிகள் நடத்தும் பயன்பாட்டிற்கு வர வேண்டி உள்ளது. இச்சமுதாய நலக்கூடம் தரைதளம் 500 ச.அடி, முதல் தளம் 2300 ச.அடி, இரண்டாம் தளம் 2300 ச.அடி ஆக மொத்தம் 5100 சதுரடிகள் போக மீதியுள்ள பகுதி பார்க்கிங் ஆகும்.

இப்பொருள் குறித்து 13.02.2026 அன்று நடைபெற்ற வார்டு குழுக் கூட்டத்தில் வைக்கப்பட்டு சமுதாய நலக்கூடத்தின் பயன்படுத்தப் போகும் மொத்த சதுர அடியான 5100 க்கு ஒரு நாள் வாடகையாக ரூ.12000/- *(Excluding GST)* ஆகவும் மற்றும் அரை நாள் வாடகையாக ரூ.6000/- *(Excluding GST)* ஆகவும் நிர்ணயம் செய்ய மண்டலம்-10 வார்டுக் குழுவில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேற்காணும் சமுதாய நலக்கூடம் தரைதளம் மற்றும் முதல் தளம், இரண்டாம் தளம் கட்டப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட சமுதாய நல கூடத்தில் வாகனம் நிறுத்தும் வசதி, தண்ணீர் வசதி, மின்சார வசதி, குளியல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு அல்லாத கட்டிடத்திற்கு ஒரு சதுர அடிக்கு ரூ.7.50/- *(GRS - 2022 Street Rate)* என பெருநகர சென்னை மாநகராட்சி சொத்து வரி விதிப்பில் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, கோட்டம் 142, பகுதி 30, வரசித்தி விநாயகர் கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை *600015*-ல் புதியதாக கட்டப்பட்டுள்ள மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு கீழ்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

கணக்கீட்டுத்தாள்/கட்டிடத்தின் விவரம்

| | |
|---|---|
| தரை தளம் | 500 சதுர அடி மீதியுள்ள பகுதி பார்க்கிங் ஆகும் |
| முதல் தளம் | 2300 சதுர அடி |
| இரண்டாம் தளம் | 2300 சதுர அடி |
| மொத்தம் | 5100 சதுர அடி |

கட்டிடத்தின் மொத்த சதுரடி 5100ச.அடி X7.50X 12 = ரூ 11,475/- (அ) ரூ.12000/-

ஆண்டுக்கு 40 நிகழ்ச்சிகள்

ஒரு நாள் வாடகை ரூ.12000/- (சேவை வரி தவிர்த்து)

அரை நாள் வாடகை ரூ,6000/- (சேவை வரி தவிர்த்து)

மேற்கண்டவாறு கணக்கிட்டுள்ள வாடகை ரூ.12000/- அரை நாள் வாடகை ரூ,6000/- எனவும் (இச்சமுதாய நலக்கூடத்தில் நடத்தப்படும் சுப நிகழ்ச்சிகளுக்கு வாடகை மட்டுமே பொருந்தும்) மற்ற நிகழ்ச்சிக்காக பயன்படுத்தப்படும் மின்சாரக் கட்டணம் கணக்கிட்டு, நிகழ்ச்சி நடத்துபவர்களிடம் தனியே வசூலிக்கப்படும். மேலும், தற்போது நடைமுறையில் உள்ள GST தொகை வாடகை தொகையுடன் சேர்த்து வசூலிக்கப்படும். சமுதாய நலக்கூடத்தில் செய்யப்பட்டுள்ள வசதிகளை பொறுத்து இந்த முன்வைப்பு தொகையை ரூ.10,000/- வரை நிர்ணயம் செய்யலாம். இந்த இடம் சென்னையில் பிரதான பகுதியான சைதாப்பேட்டையில் அமையப் பெற்றுள்ளது.

<u>**நிபந்தனைகள்**</u>

1. சமுதாய நலக்கூடத்தினை வாடகைக்கு ஒதுக்கீடு பெறும் விண்ணப்பதாரர், அதன் அசல் ஆணையுடன் நிகழ்ச்சி நடைபெறும் நாள் அன்று சம்மந்தப்பட்ட கோட்டம் -131 அலுவலகத்தினை அணுகி, சமுதாய நலக்கூடத்தின் சாவியினை பெற்று கொள்ள வேண்டும். நிகழ்ச்சி முடிந்ததும் சமுதாய நலக்கூடத்தின் பொருட்களை தவிர, மற்ற அனைத்து பொருட்களும் அகற்றப்பட வேண்டும்.

2. விண்ணப்பதாரருக்கு சமுதாய நலக்கூடத்திற்கான சாவி 131, கோட்ட உதவி பொறியாளர் அலுவலகத்தினால் வழங்கப்படும்.

3. நிகழ்ச்சிக்காக பயன்படுத்தப்படும் மின் கட்டணத்திற்கான தொகையானது வைப்பு தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு மீதமுள்ள தொகை மண்டல அலுவலகத்தினால் விண்ணப்பதாரருக்கு வழங்கப்படும். வைப்புத்தொகையை விட கூடுதலாக மின்சாரம் பயன்படுத்தப்பட்டால் அதற்கான தொகையினை விண்ணப்பதாரர் மண்டல அலுவலகத்தில் கேட்புக் காசோலையாக செலுத்திட வேண்டும்.

4. நிகழ்ச்சியின் போது சமுதாய நலக்கூடத்திற்கு விண்ணப்பதாரரால் நடத்தப்படும் நிகழ்ச்சியால் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கான இழப்பீட்டுத் தொகையினை விண்ணப்பதாரர் ஏற்க வேண்டும்.

5. வாடகைக்கு ஒதுக்கீடு பெற்ற நிகழ்ச்சிக்காக மட்டுமே சமுதாய நலக்கூடத்தினை பயன்படுத்திடவேண்டும்.

6. நிபந்தனைகளை கண்காணிக்கும் பணி மற்றும் சமுதாய நலக்கூடங்களில் பராமரிப்பு பணிகள் யாவும் தொடர்ந்து மண்டல அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும்.

7. முன்பதிவு செய்த அதே சமுதாய நலக்கூடம், விண்ணப்பதாரர் கோரும் நாளில் வேறு நிகழ்ச்சிக்காக முன்பதிவு செய்யாமல் காலியாக இருக்கும் பட்சத்தில் மாற்று தேதியில் முன்பதிவு செய்வதற்கு ஒரு முறை மட்டும் அனுமதிக்கப்படும்.

8. வெள்ளசேதம், இயற்கையின் சீற்றங்கள் ஏற்படும் காலங்களில் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அவசரத் தேவை ஏற்படின், தங்களுக்கு வாடகைக்கு விடப்பட்ட மாநகராட்சி சமுதாய நலக்கூடம் குறுகிய கால முன் அறிவிப்புடன் பொது நலன் கருதி, பெருநகர சென்னை மாநகராட்சியின் அவசர உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை இதன் வாயிலாக தெரிவிக்கப்படுகிறது.

9. இச்சமுதாய நலக்கூடம் சமய கலாச்சார அலுவலர்களுக்காக வாடகைக்கு விடப்படும். அரசியல் சார்ந்த நிகழ்ச்சிக்கு அனுமதிக்கப்படமாட்டாது,

10. அரசியல் கட்சிகள் சம்மந்தமான கொடிகள் யாதும் இக்கட்டிடத்தில் பறக்க விடக்கூடாது.

11. நிபந்தனைகளும், வாடகை விகிதங்களும் தேவைப்படும் போது சம்மந்தப்பட்ட அதிகாரிகளால் மாற்றப்படலாம்.

12. மின்சார விசை உபயோகத்திற்காக யூனிட் ஒன்றுக்கு தற்போது நடைமுறையில் உள்ள கட்டணம் வீதம் செலுத்த வேண்டும். மின்சாரத்தின் மூலமாய் அதிக அலங்காரங்கள் செய்து கொள்ள வேண்டுமானால் பெருநகர சென்னை மாநகராட்சி, மின்சார பொறியாளரிடம் முன்னதாக உத்தரவு பெற்று கொள்ள வேண்டும். நிகழ்ச்சி நடத்துபவர்கள் பந்தல் விஷயமாகவும், ஒலிபெருக்கி விஷயமாகவும் காவல் நிலைய உரிமையாணைகளை *(Licence)* தம் சொந்த செலவில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

13. பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு இச்சமுதாய நலக்கூடம் வாடகைக்கு பெற வரும் விண்ணப்பங்களை அங்கீகரிக்கவோ, நிராகரிக்கவோ பூரண உரிமை உண்டு.

14. எக்காரணம் கொண்டும் முன்பதிவு ரத்து செய்யப்படமாட்டாது. விண்ணப்பதாரரால் ரத்து செய்ய கோரும் பட்சத்தில் செலுத்தப்பட்ட வாடகை சேவை வரி நீங்கலாக முன்பணம் மட்டும் திரும்ப வழங்கப்படும்.

15. 13.02.2026 அன்று வார்டு குழு தீர்மானத்தில் கோட்டம் 142, பகுதி 30, வரசித்தி விநாயகர் கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை 600 015ல் புதியதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்தின் ஒரு நாள் வாடகை ரூ.12,000/- (ரூபாய் பன்னிரண்டாயிரம் மட்டும்) அரை நாள் வாடகை ரூ.6000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) மற்றும் சேவை வரி *(GST)* தனியே என நிர்ணயம் செய்யவும், ஏழை எளிய பொது மக்கள் சைதாப்பேட்டை தொகுதியில் அதிகம் காணப்படுவதால் முன் வைப்புத் தொகையை ரூ,5000/- ஆக நிர்ணயம் செய்து வார்டு குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-10, பகுதி-30, வார்டு-142, வரசித்தி விநாயகர் கோயில் தெருவில் அமைந்துள்ள கட்டடத்தை சமுதாய நலக்கூடமாக பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்கவும் மற்றும் ஒரு நாள் வாடகை ரூ.12,000/-ம் (GST தனியே) அரை நாள் வாடகை ரூ.6000/- ம் (GST தனியே) முன் வைப்பு தொகை ரூ,5000/- நிர்ணயம் செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "22.09.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.172/2026, நாள்.22.09.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**<u>கா.ம.து.ந.எண்.அ2 / 0732 / 2026</u>**

**<u>ஆணையர் அவர்களின் 07.08.2026 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்: 321/2026** **பொருள் எண்.14**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - கால்நடை மருத்துவத்துறை - செல்லப்பிராணிகள் கைவிடப்படுவதை தடுக்க - கைவிடப்படும் செல்லப்பிராணிகளின் உரிமையாளர்களுக்கு - ரூ.25,000/- வீதம் அபராதம் விதிக்க மன்றத்தின் அனுமதி.</u>**

நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, விதிகள் 2023, பிரிவு 292ன் படி பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள் உள்ள செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் செல்லப்பிராணிகள் வளர்ப்பதற்கான உரிமம் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் செல்லப்பிராணிகள் வளர்ப்பினை முறைப்படுத்த செல்லப்பிராணி உரிமம் பெற அதன் உரிமையாளர்கள் தங்கள் விவரங்களை பதிவு செய்து தாங்கள் வளர்க்கும் செல்லப்பிராணியின் புகைப்படம் உள்ளிட்ட பிற விவரங்களை பதிவேற்றம் செய்து ரூ.50/- கட்டணம் செலுத்த வேண்டும். வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி (Anti Rabies Vaccination) செலுத்தப்பட்ட சான்றிதழ் மற்றும் மைக்ரோசிப் செலுத்தப்பட்ட விவரம் ஆகியவற்றை பதிவுபெற்ற கால்நடை மருத்துவர்கள் மூலம் பதிவேற்றம் செய்ய வேண்டும். இந்த தகவல்கள் மண்டல கால்நடை மருத்துவ அலுவலர்களால் சரிபார்க்கப்பட்ட பிறகு செல்லப்பிராணி உரிமையாளர்களுக்கு உரிமம் இணையதள சேவை வழியாக 03.10.2025 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

செல்லப்பிராணிகளுக்கு ஆண்டுதோறும் வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி (Anti Rabies Vaccination) செலுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தவும், செல்லப்பிராணிகள் உரிமையாளர்களால் கைவிடப்படுவதை (Pet Abandonment) தடுக்கவும் அனைத்து செல்லப்பிராணிகளுக்கும் மைக்ரோ சிப்பிங் செலுத்துவது மன்றத்தின் ஆணையின்படி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவற்றில் செல்லப்பிராணிகளின் உரிமையாளரின் பெயர், முகவரி, வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்தப்பட்ட சான்றிதழ் உள்ளிட்ட தரவுகள் பதிவு செய்யப்படும்.

இந்நிலையில், இத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் 30.07.2026 வரை 78238 எண்ணிக்கையிலான செல்லப்பிராணிகளின் உரிமையாளர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது உரிமம் பெற்ற செல்லப்பிராணிகள் கைவிடப்படும் போக்கு (Abandonment) ஆங்காங்கே நடைபெறுவதாக தொடர் புகார்கள் பெறப்பட்டு வருகின்றன. எனவே, தடுக்கும் பொருட்டு உரிமம் பெற்று செல்லப்பிராணிகளை கைவிடும் உரிமையாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

அதன்படி, சாலைகள் மற்றும் பொது இடங்களில் கைவிடப்பட்ட செல்லப்பிராணிகள் கண்டறியப்பட்டால் அவற்றை மைக்ரோசிப் ஸ்கேனர் (Microchip Scanner) மூலம் ஸ்கேன் (Scan) செய்து பெறப்படும் மைக்ரோசிப் எண் மூலம் கண்டறியப்படும் உரிமையாளரின்

விவரங்களின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட உரிமையாளரிடமிருந்து அபராதத் தொகையாக ரூ. 25,000/- வீதம் வசூலிக்க வேண்டியுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகளான நாய்கள் மற்றும் பூனைகளுக்கு உரிமம் பெறுவதை கட்டாயமாக்கவும்,
2. 01.09.2026 அன்று முதல் செல்லப்பிராணிகளான நாய்கள் மற்றும் பூனைகள் கைவிடப்பட்டால் (Abandonment) அதன் உரிமையாளர்களுக்கு ரூ. 25,000/- வீதம் அபராதம் விதிக்கவும்,
3. மேற்கண்ட அபராதத் தொகையை செல்லப்பிராணிகளின் உரிமையாளர்களிடமிருந்து மண்டல கால்நடை மருத்துவ அலுவலர்கள், துப்புரவு அலுவலர்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் ஆகியோர் பெருநகர சென்னை மாநகராட்சியின் POS இயந்திரங்களின் மூலம் வசூலிக்கவும்,
4. தகவல் தொழில்நுட்ப துறையின் மூலம் அபராதத் தொகையை வசூலிக்க ஏதுவாக பெருநகர சென்னை மாநகராட்சியின் POS இயந்திரங்களில் உரிய வசதிகளை ஏற்படுத்தவும்,
5. இது குறித்து செல்லப்பிராணிகளின் உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த செய்திக்குறிப்பை வெளியிடுவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"18.09.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.076/2026, நாள்.18.09.2026-ன்படி இவ்வினத்தில் குறிப்பிட்டுள்ள கைவிடப்படும் செல்லப்பிராணிகளின் உரிமையாளர்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகை ரூ.25000/- மிக அதிகமாக உள்ளது என நிலைக்குழு (பொது சுகாதாரம்) பெரும்பான்மையான உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், ரூ.25,000/- என்பதற்கு பதிலாக ரூ.10,000/- அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

“22.09.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், அபராத தொகை ரூ.25,000/- என்பதற்கு பதிலாக அபராத தொகை ரூ.10,000/- விதிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் தீர்மான எண்.173/2026, நாள்.22.09.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**பொ.சு.து.ந.க.எண்.பி2(AU)/3399-1/2026**

**ஆணையர் அவர்களின் 09.09.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 322/2026** **பொருள் எண்.15**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - அம்மா உணவகம் -- ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனையில் அம்மா உணவகம் அமைக்க கோருவது குறித்த கோரிக்கை - தேர்வு செய்யப்பட்ட இடத்தில் அம்மா உணவகம் அமைக்க அரசின் பின்னோக்கு அனுமதி பெற மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் 1 முதல் 15 வரையுள்ள 200 கோட்டங்களிலும் மற்றும் கீழ்கண்ட 7 அரசு மருத்துவமனைகளிலும் 383 அம்மா உணவகங்கள் தற்போது செயல்பட்டு வருகிறது.

1. அரசு ஆர்.எஸ்.ஆர்.எம்.மருத்துவமனை
2. அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை
3. அரசு ராஜீவ்காந்தி மருத்துவமனை
4. எழும்பூர் தாய் சேய் நல மருத்துவமனை
5. அரசு கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை
6. அரசு கஸ்தூரிபா காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவமனை
7. அரசு இராயப்பேட்டை மருத்துவமனை.

தினத்தந்தி பத்திரிக்கையின் 22.06.2026 நாளிட்ட செய்தி, இயக்குநர், தமிழ்நாடு ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனை அவர்களின், 25.06.2026 நாளிட்ட கடிதம், தி இந்து நாளிதழ் 26.07.2026 நாளிட்ட செய்தி மற்றும் திரு. ஜெயக்குமார் சேகர் அவர்களின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 01.08.2026 நாளிட்ட இணையதள மனுவின்படி, ஓமந்தூரார் அரசு பன்னோக்கு ஆஸ்பத்திரியில் ஏழை எளிய மக்களின் பசியினை போக்கவும், தமிழ்நாடு ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் மற்றும் உடன் வருபவர்களுக்கு தரமான மற்றும் குறைந்த விலையில் உணவு கிடைக்கும் வகையிலும் அம்மா உணவகம் அமைக்க வேண்டும் என கோரப்பட்டதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்கு உட்பட்ட தமிழ்நாடு ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனையில் அம்மா உணவகம் தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 26.07.2026 அன்று ஆணையர் அவர்களினால் ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி மருத்துவமனையில் யோகா கட்டிடத்திற்கு அருகில் இடம் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவித்து அம்மா உணவகம் அமைக்க விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டப்பட்ட தகவலின் அடிப்படையில், மருத்துவமனை இயக்குநர் அவர்களினால் மருத்துவமனை வளாகத்தில் உள்ள யோகா கட்டிடத்திற்கு அருகில் தேர்வு

செய்யப்பட்ட இடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் தேர்வு செய்யப்பட்ட இடம் வாகனங்கள் நிறுத்தும் திறந்த வெளியாக உள்ள காரணத்தினால் உடனடியாக அம்மா உணவகம் தொடங்குவதற்கு உகந்ததல்ல என முடிவு எடுக்கப்பட்டது.

மருத்துவமனை இயக்குநர் அவர்களின், 04.08.2026 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள, மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் உறவினர்கள் மற்றும் உடனிருப்போர் குறைந்த செலவில் உணவு கிடைக்க வேண்டுமென தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்ற காரணத்தினை கருத்தில் கொண்டு, மருத்துவமனையின் டவர்-1, புறநோயாளர் (OPD) நுழைவாயில் அருகே அம்மா உணவகத்தை விரைவாக அமைப்பதற்கு ஏற்ற இடம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இவ்விடத்தில் அம்மா உணவகம் அமைக்க அதிக செலவு தேவையில்லை. மேலும், பெரிய அளவிலான உள்கட்டமைப்பு மாற்றங்களும் அவசியமில்லை. ஏனெனில், தண்ணீர், மின்சாரம் மற்றும் கழிவுநீர் வடிகால் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்கனவே அங்கு உள்ளன.

எனவே, மேற்கண்ட இடத்தில் அம்மா உணவக சேவையை விரைவில் தொடங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதன்படி, மருத்துவமனை வளாகத்தின் உட்புறம் உள்ள குழந்தைகள் பிரிவு ஆய்வு செய்யப்பட்டதில் அம்மா உணவகம் தொடங்குவதற்கு தேவையான சமையல் அறை, பாத்திரங்கள் கழுவுவதற்கு வசதி, உணவு விநியோகிக்கும் இட வசதி, உணவு அருந்தும் இட வசதி, மூலப்பொருட்கள் சேமிக்கும் இருப்பு அறை வசதி, பயனாளிகள் உணவு உண்டபின் கை கழுவும் வசதி, கழிப்பறை வசதி உள்ளிட்ட வசதிகள் உள்ள காரணத்தினால் அம்மா உணவகம் அமைக்க உகந்தாக உள்ளது. அவற்றில் சிறு சிறு கட்டிட மேம்பாடு மேற்கொண்டால் மட்டுமே போதுமானது.

தமிழ்நாடு ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனை வளாகத்தில் கட்டிட பராமரிப்பு மற்றும் மின்சார பணியினை அம்மா உணவகம் விரைந்து தொடங்க பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பணியினை மேற்கொள்ளுமாறு இயக்குநர், தமிழ்நாடு ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனை அவர்களின் , 18.08.2026 நாளிட்ட கடிதத்தில் வேண்டப்பட்டுள்ளது.

மேற்படி கோரிக்கையின்படி ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் அம்மா உணவகம் அமைக்க கீழ்கண்ட தேவைகள் அதற்குரிய நடவடிக்கைகள் மற்றும் தோராய செலவின விவரம் கீழ்கண்டவாறு பட்டியலிடப்படுகிறது.

**<u>அட்டவணை I</u> (ரூபாயில்)**

| வ. எண் | விவரம் | பணி மேற்கொள்ளும்/ கொள்முதல் செய்யும் நடைமுறை | பணி மேற்கொள்ளும்/ கொள்முதல் செய்யும் துறை | தோராய செலவினம் மற்றும் கணக்கு குறியீட்டு விவரம் | |
|---|---|---|---|---|---|
| 1 | கட்டிட பராமரிப்பு | தமிழ்நாடு வெளிப்படை தன்மை ஒப்பந்த சட்டம் மற்றும் விதிகளின்படி பணி மேற்கொள்ளுதல் | மண்டல அளவில் | 5,52,000 | ஒரு முறை மட்டும்/ 41 – 24 – 00 - 509 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *2* | இயந்திரங்கள் மற்றும் பாத்திரங்கள் கொள்முதல் | இணைப்பில் இணைக்கப்பட்டுள்ள வைகளுக்கு தமிழ்நாடு வெளிப்படை தன்மை ஒப்பந்த சட்டம் மற்றும் விதிகளின்படி கொள்முதல் செய்தல் | | மண்டல அளவில் | 6,50,000 | ஒரு முறை மட்டும் / 410 – 402 - 302 |
| | பில்லிங் இயந்திரம் கொள்முதல் | 28.01.2025 அன்று தகவல் தொழில் நுட்பத்துறையின் பணியாணை அடிப்படையில், திருவாளர்.*Tricom Technologies, 289-292,* 13வது குறுக்கு 2வது மெயின் ரோடு, பாய்லேஅவுட், பெங்களூரு - *560016* என்ற நிறுவனத்திடமிருந்து தகவல் தொழில் நுட்பத்துறை அளித்த தொகையில் கொள்முதல் செய்தல் | | தகவல் தொழில் நுட்பத்துறையின் வாயிலாக கொள்முதல் செய்யவும் மற்றும் அதற்குரிய தொகையான மண்டலத்தின் மூலம் தீர்வு செய்தல் | | |
| *3* | மூலப் பொருட்கள் கொள்முதல் செய்வதற்கான செலவினம் | அரிசி மற்றும் கோதுமை | அரசாணை எண்.103, *CFCP* துறை நாள். 03.08.2023ன் படி மானிய விலையில் கொள்முதல் செய்தல் | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் மண்டல அளவில் முன்பணம் கோரி தலைமையகத்தின் மூலம் முன்பணம் வழங்குதல் | 16,80,000 | ஆண்டிற்கு / 909103 - 230201000 |
| | | மளிகைப் பொருட்கள், காய்கறிகள் மற்றும் சமையல் எரிவாயு உருளைகள் | மன்ற தீர்மான எண்.486/2024 நாள். 28.11.2024யின்படி | திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் என்ற கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் மண்டல அளவில் கொள்முதல் செய்து தலைமையகத்தின் மூலம் பட்டி தீர்வு செய்தல் | | ஆண்டிற்கு/ 909103-230201000 & 230201100 |
| *4* | மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான | 6 நபர்கள் | அரசாணை எண்.10, *MAWS* துறை | ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு ரூ.325 வீதம் மண்டல | 7,11,750 | ஆண்டிற்கு/ 2010100608 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | தினக்கூலி | | 10.06.2022 மற்றும் மன்ற தீர்மான எண். 170/2024 நாள். 24.06.2024 யின்படி | அளவில் தினக்கூலி வழங்குதல் | | |
| 5 | அம்மா உணவக சில்லறை செலவினம் | ஒரு மாதத்திற்கு ரூ.8500/- | மன்ற தீர்மான எண்.411/2024 நாள். 29.10.2024யின்படி | மண்டல அளவில் | 1,02,000 | ஆண்டிற்கு / 230510305 |
| மொத்த தோராய செலவினம் | | | | | 36,95,750.00 | |

<u>உணவு பொருட்கள் விற்பனை:</u>

பிற அம்மா உணவகங்களில் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மானிய விலையில் விற்பனை செய்யப்படும் உணவுப்பொருட்களை மேற்கண்ட மருத்துவமனையில் தொடங்க உள்ள அம்மா உணவகத்திலும் விற்பனை செய்யலாம்.

**<u>அட்டவணை II</u>**

| உணவுப் பொருள் | விற்பனை விலை |
|---|---|
| இட்லி | ₹1 |
| பொங்கல் | ₹5 |
| சாம்பார் சாதம் | ₹5 |
| எலுமிச்சை சாதம் | ₹5 |
| கறிவேப்பிலை சாதம் | ₹5 |
| தயிர் சாதம் | ₹3 |
| இரண்டு சப்பாத்திகள் மற்றும் பருப்பு | ₹3 |

**<u>அட்டவணை III (ரூபாயில்)</u>**

| வ.எண் | விவரம் | ஒரு நாளைக்கு | ஆண்டிற்கு |
|---|---|---|---|
| 1 | ஒரு நாளைக்கு ஒரு பயனாளிக்கு விற்பனை செய்யப்படும் விற்பனை தொகை | 30 | 10,950.00 |
| 2 | ஒரு நாளைக்கு உத்தேசமாக வருகை தரும் 150 பயனாளிகளுக்கு விற்பனை செய்யப்படும் விற்பனை தொகை | 4500 | 16,42,500.00 |

<u>அட்டவணை *IV* (ரூபாயில்)</u>

| | |
|---|---|
| தோராய மொத்த செலவினத்தொகை | 36,95,750.00 |
| தோராய மொத்த விற்பனைத்தொகை | 16,42,500.00 |
| தோராய கூடுதல் செலவினத்தொகை | 20,53,250.00 |

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே மருத்துவமனைகளில் செயல்படும் அம்மா உணவகங்களை தொடங்குவதற்கு அரசாணை எண்.568, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.18.11.2013-ன்படி அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது அதேபோன்று மேற்படி ஓமந்தூரார் அரசு பல்நோக்கு மருத்துவமனையில் அம்மா உணவகம் தொடங்குவதற்கு அரசின் அனுமதி பெற வேண்டி உள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியில், மண்டலம்-5, கோட்டம்-59ல் உள்ள ஓமந்தூரார் அரசு பல்நோக்கு மருத்துவமனையில் தேர்வு செய்யப்பட்ட இடத்தில் அம்மா உணவகம் தொடங்குவதற்கு பிற மருத்துவமனைகளில் தொடங்க அனுமதி பெற்றதை போன்று மன்றத்தின் வாயிலாக அரசின் பின்னோக்கு அனுமதி பெற அனுமதியும்,

2. மேற்படி தொடங்கப்படவுள்ள அம்மா உணவகத்திற்கு தேவையான கட்டிட பராமரிப்பு பணி, இணைப்பில் இணைக்கப்பட்டுள்ள இயந்திரங்கள் மற்றும் பாத்திரங்கள் கொள்முதல் செய்தல், பில்லிங் இயந்திரத்தினை கொள்முதல் செய்தல், அரசாணையின்படி அரிசி மற்றும் கோதுமையினை மானிய விலையில் கொள்முதல் செய்தல், மளிகைப் பொருட்கள், காய்கறிகள் மற்றும் சமையல் எரிவாயு உருளைகளை கொள்முதல் செய்தல், அம்மா உணவக சில்லறை செலவினம் மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பணிகளை அட்டவணை-Iல் குறிப்பிட்டுள்ளவாறு மேற்கொண்டு செலவினம் செய்வதற்கு அனுமதியும்,

3. மேற்படி தொடங்கப்படவுள்ள அம்மா உணவகத்திற்கு தேவையான 6 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதர சென்னை மாவட்ட திட்ட அலுவலர் மூலம் பணியமர்த்தி ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு ரூ.325 வீதம் மண்டல அளவில் தினக்கூலி வழங்குவதற்கு அனுமதியும்,

4. மேற்கண்ட மருத்துவமனையில் தொடங்க உள்ள அம்மா உணவகத்தில், பிற அம்மா உணவகங்களில் அட்டவணை-IIல் குறிப்பிட்டுள்ள உணவுப்பொருட்களை மானிய விலையில் விற்பனை செய்யப்படுவது போன்று விற்பனை செய்ய அனுமதியும்,

5. மேற்கண்ட அம்மா உணவகம் தொடங்குவதற்கு தேவைப்படும் உத்தேச செலவினத்தில், உத்தேச விற்பனை தொகை போக ஓராண்டிற்கான கூடுதல் உத்தேச செலவினமான ரூ.20,53,250/-யினை மாநகராட்சி நிதியில் செலவினம் மேற்கொள்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“18.09.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.078/2026, நாள். 18.09.2026 -ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ”

“22.09.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.175/2026, நாள்.22.09.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.3.சு.து.ந.க.எண்.சு1/4995/2026**

**ஆணையர் அவர்களின் 31.08.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 323/2026** **பொருள் எண்.16**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 3 (மாதவரம்) கோட்டம்-23 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் சுகாதார களப்பணியினை மேற்கொள்ள (SHG) அண்டை வீட்டு குழு மூலம் பணி புரிந்து வந்த 123 சுகாதார களப்பணியாளர்களின் (Sector Health Workers) பணி காலம் 28.09.2026 அன்று முடிவடைய உள்ளதால் 01.10.2026 முதல் 30.09.2027 வரை ஓர் ஆண்டிற்கு சுகாதார களபணிகளை (SHG) அண்டை வீட்டு குழு மூலம் மேற்கொள்ள 123 எண்ணிக்கையிலான 11 குழு உறுப்பினர்களை தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்த நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3 கோட்டங்கள் 23 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் ஒவ்வொரு வீட்டில் உள்ள நீர்த் தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல் நிலைத் தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படா வண்ணம் கொசுப்புழு தடுப்பு பணி மேற்கொண்டு கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்கன் குன்யா, யானைக்கால் மற்றும் மூளைக் காய்ச்சல் போன்ற நோய்களை கட்டுப்படுத்தவும், நீர் வழித்தடங்கள், மழைநீர்க் கால்வாய்கள், பக்க கால்வாய்களில் கொசு மருந்து தெளிக்கவும், புகை பரப்பும் பணி மேற்கொள்ளவும், நிரந்தர பணியாளர்களின் பற்றாக்குறை காரணமாக கோட்டம்-23 முதல் 33 வரையிலான 11 கோட்டங்களுக்கு 29.09.2025 முதல் 28.09.2026 வரை சுகாதார களப்பணி *(Sector Health Workers)* மேற்கொள்ள 123 எண்ணிக்கையிலான *(SHG)* அண்டை வீட்டு குழு உறுப்பினர்கள் பணி புரிய நிர்வாக அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மண்டலம்-3ல் மொத்தம் 58,613 வீடுகள் உள்ளன. இவ்வீடுகளில் உள்ள மேல்நிலைத் தொட்டிகள், கீழ்நிலைத் தொட்டிகள் மற்றும் கிணறுகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப் புழு வளர்ச்சி ஏற்படாவண்ணம் சுகாதார களப்பணி மேற்கொள்ள 90 எண்ணிக்கையிலான சுகாதார களப்பணியாளர்கள் *(SHG)* அண்டை வீட்டு குழு உறுப்பினர்களும் கோட்டங்கள் 29, 30, 31 மற்றும் 32ல் 12.6 கி.மீ நீளமுள்ள நீர் வழித்தடத்தில் உள்ள குப்பைகள் மற்றும் செடிகளை அகற்றி மருந்து தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள 7 *(SHG)* அண்டை வீட்டு குழு உறுப்பினர்களும், மழைநீர்க் கால்வாய் மற்றும் பக்க கால்வாய் என மொத்தம் 108.6 கி.மீ இவற்றில் மருந்து தெளிப்பு பணி மேற்கொள்ள *15 (SHG)* அண்டை வீட்டு குழு உறுப்பினர்களும், புகை மருந்து பரப்பும் பணி மேற்கொள்ள 11 குழு உறுப்பினர்களும் ஆக மொத்தம் 123 எண்ணிக்கையிலான *(SHG)* அண்டை வீட்டு குழு பணியாளர்கள் சுகாதார களப்பணி மேற்கொள்ள தேவைப்படுகின்றது.

| சுகாதார கள பணியாளர்களின் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| கோட்டம் | சுகாதார கள பணியாளர் எண்ணிக்கை | பணியாளர்களின் விவரம் | | | |
| | | செக்டார்களின் எண்ணிக்கை | மருந்து தெளிக்கும் பணியாளர்களின் எண்ணிக்கை | புகை மருந்து பரப்பு பணியாளர் களின் எண்ணிக்கை | பக்க கால்வாய்களில் பணிபுரியும் பணியாளர் களின் எண்ணிக்கை |
| 23 | 12 | 10 | 1 | 1 | 0 |
| 24 | 7 | 4 | 2 | 1 | 0 |
| 25 | 11 | 8 | 2 | 1 | 0 |
| 26 | 8 | 6 | 1 | 1 | 0 |
| 27 | 9 | 7 | 1 | 1 | 0 |
| 28 | 9 | 6 | 2 | 1 | 0 |
| 29 | 15 | 10 | 2 | 1 | 2 |
| 30 | 14 | 10 | 1 | 1 | 2 |
| 31 | 10 | 6 | 1 | 1 | 2 |
| 32 | 20 | 16 | 2 | 2 | 0 |
| 33 | 8 | 6 | 1 | 1 | 0 |
| மொத்தம் | 123 | 89 | 16 | 12 | 6 |

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி என்பதால் அவசரம் மற்றும் அவசியம் கருதி சுகாதார களப்பணிகளை (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்கள் மூலம் மேற்கண்ட அளவில் நியமித்து சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே) அவர்களின், 05.12.2025 நாளிட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் சுகாதார கள பணியாளர்களுக்கு (Sector Health Workers) நாள் ஒன்றுக்கு ரூ.761/- என்ற அடிப்படையில் மண்டலம்-3ல் (SHG) அண்டை வீட்டு குழுக்கள் அமைத்து அதன் மூலம் 365 நாட்களுக்கு குழு உறுப்பினர்களை சுகாதார கள பணியில் ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணி விவரம் | தேவைப்படும் அண்டை வீட்டு குழு (SHG) சுகாதார கள பணியாளர்களின் எண்ணிக்கை | 05.12.2025 நாளிட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் தினக்கூலி நாள் ஒன்றுக்கு | தோராயமாக செலவினம் |
|---|---|---|---|---|
| 1 | கொசுப்புழு தடுப்பு பணி, மருந்து தெளிப்புப் பணி, புகைப்பரப்பும் பணி, நீர் வழித்தடப் பணிகள் | 123 | ரூ. 761/- | ரூ.761 X 123 (பணியாளர்கள்) X 365 நாட்கள் = ரூ.3,41,65,095/- |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்களை கொண்டு கொசுப் புழு தடுப்புப் பணி, மருந்து தெளிக்கும் பணி, புகை மருந்து பரப்பும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-3ல் மேற்படி

பணியினை திறம்பட செயல்படுத்த மேற்பார்வை பொறியாளர் அவர்களின், 05.12.2025 நாளிட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு ரூ.761/- வீதம் 123 எண்ணிக்கையிலான *(SHG)* அண்டை வீட்டு குழு உறுப்பினர்களுக்கு ஆகும் தோராய செலவு ரூ.761 *X 123* (பணியாளர்கள்) *X 365* (நாட்கள்) என ஓர் ஆண்டிற்கு ரூ.3,41,65,095/- (ரூபாய். மூன்று கோடியே நாற்பத்தி ஒன்று இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து தொண்ணூற்று ஐந்து மட்டும்) என்று கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. அண்டை வீட்டு குழு பணியாளர்களின் (SHG) பணிக்காலம் 28.09.2026 அன்றுடன் முடிவடைய உள்ளதால் 01.10.2026 முதல் 30.09.2027 வரை ஓராண்டு காலத்திற்கு (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்களை சுகாதார கள பணியில் ஈடுபடுத்தவும்,

2. சுகாதார களப்பணி அண்டை வீட்டு குழு உறுப்பினர்களின் (SHG) ஊதியத்தை 365 நாட்களுக்கு 05.12.2025 நாளிட்ட மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே) அவர்களின் சுற்றறிக்கையின் அடிப்படையில் தினக்கூலி ரூ.761/- வீதம் 123 குழு உறுப்பினர்களுக்கு 365 நாட்களுக்கு வழங்குவதற்கு ஆகும் செலவினம் ரூ.761 X 123 X 365 = ரூ.3,41,65,095/- (ரூபாய். மூன்று கோடியே நாற்பத்தி ஒன்று இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து தொண்ணூற்று ஐந்து மட்டும்) வழங்குவதற்கு நிர்வாக அனுமதியும்,

3. அண்டை வீட்டு குழு உறுப்பினர்கள் (SHG) சுகாதார கள பணியில் ஈடுபட்டு வரும் நிலையில் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அண்டை வீட்டு குழு உறுப்பினரை (SHG) பணியிலிருந்து நீக்கி மாற்று பணியாளரை மண்டல அலுவலர்-3 அவர்களின் அனுமதியுடன் சேர்க்கவும்,

4. சுகாதார கள பணியில் ஈடுபடும் அண்டை வீட்டு குழு உறுப்பினர்கள் (SHG) பணி செய்த நாட்களுக்கு மண்டல நல அலுவலர்-3 அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதன் அடிப்படையில் கணக்கிட்டு குழு உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்கவும்,

5. இப்பணிக்கான செலவீன தொகையை கணக்கு தலைப்பு எண்.30-32-02, கணக்கு குறியீட்டு எண்.210-10-06-02 (PAYMENT TO CASUAL STAFF-HEALTH WORKS) என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு ஆணையர் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில் **இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின்** 28.08.2026 நாளிட்ட மேற்குறிப்பில், ***"this may be permitted for 6 Months"*** என தெரிவித்துள்ளார்.

எனவே, இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் மேற்குறிப்பின் அடிப்படையில் மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 18.09.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 24.09.2026 அன்று தீர்மான எண்.079/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் கூட்டம் 22.09.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 24.09.2026 அன்று தீர்மான எண்.176/2026-ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.5.சு.து.ந.க.எண்.எச்2/ 2757 /2026**

**ஆணையர் அவர்களின் 22.09.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 324/2026** **பொருள் எண்.17**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்– 5 - சுகாதாரத்துறை – 49 முதல் 63 வரையுள்ள கோட்டங்களில் 01.10.2025 முதல் 30.09.2026 வரை சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள 147 உறுப்பினர்களைக் கொண்ட 12 சுய உதவி குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் வழியாக சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது - இப்பணிக்காலம் 30.09.2026 அன்றுடன் முடிவடைகிறது - 147 உறுப்பினர்களைக் கொண்ட 12 சுயஉதவி குழுக்களின் பணிக்காலத்தை 01.10.2026 முதல் 30.09.2027 வரை ஓராண்டு காலத்திற்கு பணிகளை மேற்கொள்ள அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின், 09.09.2025 நாளிட்ட ஆணையின்படியும் மற்றும் மன்றத் தீர்மான எண் 1042/2025, நாள்.29.09.2025-ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மண்டலம்-5, கோட்டம்-49 முதல் 63 வரை உள்ள கோட்டங்களில் வீட்டிலுள்ள நீர்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத்தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படா வண்ணம், கொசு மருந்து தெளிக்கவும், கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த புகைமருந்து தெளிக்கும் பணி மற்றும் சுகாதார பணிகளை மேற்கொள்ளவும் சுய உதவிக் குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் மூலம் சுகாதார பணிக்காக 131 நபர்கள் மற்றும் ரிப்பன் மாளிகை, பணிக்காக 16 நபர்கள் மொத்தம் 131+16=147 நபர்களை (01.10.2025 முதல் 30.092026 வரை) ஓர் ஆண்டு காலத்திற்கு தற்காலிக தினக்கூலி பணியாளர்களாக பணியில் ஈடுபடுத்த ஆணையர் அவர்களின் 09.09.2025 நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது.

இதற்கென மன்றத் தீர்மான எண்.1042/2025, நாள். 29.09.2025 நாளிட்ட மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், மண்டலம்-5க்குட்பட்ட எல்லையில் இயங்கி வரும் தலைமை செயலகம், ரிப்பன் மாளிகை, கலைவாணர் அரங்கம், உயர்நீதி மன்றம், காவல் ஆணையர் அலுவலகம், இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, எழும்பூர் மகப்பேறு மருத்துவமனை, எழும்பூர் அரசு கண் மருத்துவமனை, அரசு ஸ்டான்லி மருத்துவமனை, ஆர்.எஸ்.ஆர்.எம் மகப்பேறு மருத்துவமனை, ஓமந்தூரார் பல்நோக்கு அரசு பொது மருத்துவமனை, அரசு பல் மருத்துவமனை, டாக்டர்.எம்.ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் ரயில் நிலையம், எழும்பூர் ரயில் நிலையம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் போன்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை அரசு அலுவலகங்கள் இயங்கி வருவதால், பொது சுகாதாரப்பணிகளில் தனிக்கவனம் செலுத்தும் வகையில், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன் கருதியும் அவசரம் மற்றும் அவசியம் கருதி இப்பணிகளை தொடர வேண்டியுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை துறையின் சுற்றறிக்கை தி.க.மே.து.ந.க.எண்.அ3/ 2759/2026, நாள்: 29.07.2026-ன்படி குறைந்தபட்ச ஊதியம் மற்றும் அகவிலைபடியுடன் ஒரு நாளைக்கு ஒரு பணியாளருக்கு ரூ.762/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியாளர்கள் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு ஊதியம் | 01.10.2026 முதல் 30.09.2027 வரை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | 147 | ரூ.762/- | 365 நாட்களுக்கு | ரூ. 4,08,85,110/- |

அதனடிப்படையில் 01.10.2026 முதல் 30.09.2027 வரை ஓராண்டு காலத்திற்கு 147 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.762/- வீதம், 762 X 365 X 147 = ரூ. 4,08,85,110/- (ரூபாய். நான்கு கோடியே எட்டு இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து நூற்றி பத்து மட்டும்) தேவைப்படுவதால் இத்தொகையை கணக்கு குறியீடு எண். 30-32-02 மற்றும் கணக்கு தலைப்பு எண். 210-100-602 தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்து சுய உதவி குழு உறுப்பினர்கள் மூலம் தொடர்ந்து பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே,

1. மண்டலம்-5ல் சுய உதவிக் குழுக்களின் மூலம் வழங்கப்பட்ட 147 நபர்களை, சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள தற்காலிக பணியில் ஈடுபடுத்திக்கொள்ளவும், திடக்கழிவு மேலாண்மை துறையின் சுற்றறிக்கை தி.க.மே.து.ந.க.எண்.அ3/2759/2026, நாள்:29.07.2026-ன்படி குறைந்தபட்ச ஊதியம் மற்றும் அகவிலைபடியுடன் ஒரு நாளைக்கு ஒரு பணியாளருக்கு ரூ.762/- ஊதியத்தின் அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு 01.10.2026 முதல் 30.09.2027 வரை தற்காலிக தினக்கூலி அடிப்படையில் பணியில் ஈடுபடுத்த அனுமதியும்,

2. தற்காலிகமாக பணியில் ஈடுபடுத்தப்படும் 147 நபர்களுக்கு நடப்பு நிதியாண்டில் 2026-27ல் ஓராண்டு காலத்திற்கு 01.10.2026 முதல் 30.09.2027 வரை ஆகும் ஊதிய செலவினத் தொகையான நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.762/- வீதம், 762X365X147= ரூ. 4,08,85,110/- (ரூபாய். நான்கு கோடியே எட்டு இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து நூற்றி பத்து மட்டும்) வழங்க, கணக்கு குறியீடு எண். 30-32-02 (ம) கணக்கு தலைப்பு எண். 210-100-602ல், கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய, நிதி நிர்வாகப் பிரிவுக்கு அனுமதியும்,

3. சுய உதவிக் குழுக்களின் (SHG) மூலம் தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையிலும் (ம) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு (J1) துறை, அரசாணை 2(D) எண்: 36 நாள்: 16.06.2023- பெருநகர சென்னை மாநகராட்சியில் அமல்படுத்தவும் மற்றும் அரசிதழில் குறிப்பிட்டுள்ளவாறு தினக்கூலி பணியாளர்களுக்கு ஒவ்வொரு

ஆண்டும் Explanations || (1) ii-ன்படி முந்தைய ஆண்டின் சராசரி (Consumer Price Index)அடிப்படையில் அகவிலைப்படி உயர்த்தி ஏப்ரல் முதல் நாளிலிருந்து ஊதியம் வழங்க அனுமதியும்,

4. மேற்கண்ட பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வழியாக 147 நபர்களை சுகாதாரப் பணியில் ஈடுபடுத்த ஓராண்டு காலத்திற்கு 01.10.2026 முதல் 30.09.2027 வரை தற்காலிக தினக்கூலி அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 18.09.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 24.09.2026 அன்று தீர்மான எண்.080/2026ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் கூட்டம் 22.09.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டும் பெரும்பான்மை உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் சுகாதாரப் பணியாளர்களின் பணிக்காலம் முடிவடைந்த நாளிலிருந்து தொடர்ச்சியாக பணிபுரிய அனுமதிக்காமல் இடைவெளிவிட்டு பின்னர் தற்காலிக பணியாளர்களை பணிபுரிய அனுமதிக்கலாம் என்ற நிபந்தனையுடன் தீர்மான எண்.177/2026, நாள்.24.09.2026-ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.5.சு.து.ந.க.எண்.எச்2/2756/2026**

**ஆணையர் அவர்களின் 09.09.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 325/2026** **பொருள் எண்.18**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்- 5 - சுகாதாரத்துறை – 49 முதல் 63 வரையுள்ள கோட்டங்களில் 01.10.2025 முதல் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள 03 உறுப்பினர்கள் - நீதிமன்ற ஆணை - இப்பணிக்காலம் 15.09.2026 அன்றுடன் முடிவடைகிறது - 03 உறுப்பினர்கள் பணிக்காலத்தை 16.09.2026 முதல் 15.09.2027 வரை ஓராண்டு காலத்திற்கு பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 09.09.2025 நாளிட்ட ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மண்டலம்-5, கோட்டம்-49 முதல் 63 வரை உள்ள கோட்டங்களில் வீட்டிலுள்ள நீர்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத்தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படா வண்ணம், கொசு மருந்து தெளிக்கவும், கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த புகைமருந்து தெளிக்கும் பணி மற்றும் சுகாதார பணிகளை மேற்கொள்ளவும் சுய உதவிக் குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் மூலம் சுகாதார பணிக்காக 147 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இவர்களின் பணிக்காலம் 30.09.2026 அன்றுடன் முடிவடைவதால் மேற்கண்ட 147 பணியாளர்களுக்கு மேலும் ஓராண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு வேண்டி ஆணையர் அவர்களுக்கு கோப்பு அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில், இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் வரைவு கடிதம் 26.08.2025 நாளிட்ட ஆணையின்படி, பணி நிரந்தரம் கோரி, 10 எண்ணிக்கையிலான தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கப் பணியாளர்கள் (NULM) வழக்கு தொடுத்த நிலையில் அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து தனியர்கள் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுத்துள்ளனர். (Complaint Petition No 3810 of 2024 in W.M.P No 31563 of 2022), கோட்டம்-55, மண்டலம்-5, வரிசை எண். 10ல் உள்ள, திரு. நரேஷ் (NUUM)) என்ற பணியாளர் மட்டும் தனது குடும்ப சூழ்நிலை மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளில் ஈடுபடாமலும் பணிக்கு விடுப்பு எடுக்காமல் பணிக்கு வருவேன் என்று உறுதி கடிதம் தெரிவித்துள்ளதால் அவரை மட்டும் கடந்த 18.10.2024 அன்று மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டார். இந்நிகழ்வில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை முடித்துக் கொள்வது அவசியமாகிறது. இவ்வழக்கு உயர்நீதிமன்ற தற்காலிக தடை உத்தரவில்

1. The Petitioner/ Labour Union represent the interest of temporary workers and they claim that they have been working for a very long period of time. However, their apprehension is that their service will be substituted by fresh set temporary workers.

2. The learned counsel for the petitioner would submit that if at all the respondents have to induct new employees, they have to induct only through a proper recruitment notification. Instead, accordingly to her, the respondents are now attempting to induct temporary workers.

3. In similar circumstances, the very same Union had approached this court in WP.No.11012 of 2017 and WP.No.11975 & 11976 of 2017 and this court, by an order dated 28.04.2017, ordered status quo, or the same set of facts.

4. Since the petitioner has made out a prima facie case, this count is inclined to grant interim injunction as prayed for i I W.M.P.No.31563 of 2022.

5. Accordingly, there shall be an order of interim injunction, a prayed for.

எனவே, அவசர அவசியம் கருதி நீதிமன்ற வழக்கு தொடுத்துள்ள 9 நபர்களையும் அவரவர் பணிபுரிந்த மண்டலங்களிலேயே பணியமர்த்தி தினக்கூலி வழங்க இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் வரைவு கடிதத்தின் உத்தரவின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதில் மண்டலம் -5க்கு திரு. நரேஷ் (NUM)) என்ற பணியாளர் ஏற்கனவே பணிபுரிந்து வரும் நிலையில், மீதமுள்ள 3 நபர்களையும் பணியில் ஈடுபடுத்துவது அவசியமாகிறது.

| வ.எண் | மண்டலம் | ஏற்கனவே பணிபுரியும் பணியாளர்கள் | நீதிமன்ற அவமதிப்பு வழக்கு கொடுத்துள்ள பணியாளர்கள் | ஆக மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | 05 | 147 | 03 | 150 |

எனவே, 03 நபர்களை (16.09.2025 முதல் 15.092026 வரை) ஓர் ஆண்டு காலத்திற்கு தற்காலிக தினக்கூலி பணியாளர்களாக பணியில் ஈடுபடுத்த ஆணையர் அவர்களின் 20.09.2025 நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை துறையின் சுற்றறிக்கை தி.க.மே.து.ந.க.எண்.அ3/ 2759/2026, நாள: 29.07.2026-ன்படி குறைந்தபட்ச ஊதியம் மற்றும் அகவிலைபடியுடன் ஒரு நாளைக்கு ஒரு பணியாளருக்கு ரூ.762/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியாளர்கள் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு ஊதியம் | 16.09.2026 முதல் 15.09.2027 வரை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | 03 | ரூ.762/- | 365 நாட்களுக்கு | ரூ. 8,34,390/- |

அதனடிப்படையில் 16.09.2026 முதல் 15.09.2027 வரை ஓராண்டு காலத்திற்கு 03 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.762/- வீதம், 762 X 365 days X 03 = ரூ. 8,34,390/- (ரூபாய். எட்டு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து முந்நூற்று தொண்ணூறு மட்டும்) தேவைப்படுவதால் இத்தொகையை கணக்கு குறியீடு எண்.30-32-02 மற்றும் கணக்கு தலைப்பு எண்.210-100-602 தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்து சுய உதவி குழு உறுப்பினர்கள் மூலம் தொடர்ந்து பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே,

1) மண்டலம்-5ல் சுய உதவிக் குழுக்களின் மூலம் வழங்கப்பட்ட 03 நபர்களை, சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள தற்காலிக பணியில் ஈடுபடுத்திக்கொள்ளவும், திடக்கழிவு மேலாண்மை துறையின் சுற்றறிக்கை தி.க.மே.து.ந.க.எண்.அ3/2759/2026, நாள: 29.07.2026-ன்படி குறைந்தபட்ச

ஊதியம் மற்றும் அகவிலைபடியுடன் ஒரு நாளைக்கு ஒரு பணியாளருக்கு ரூ.762/- ஊதியத்தின் அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு 16.09.2026 முதல் 15.09.2027 வரை தற்காலிக தினக்கூலி அடிப்படையில் பணியில் ஈடுபடுத்த அனுமதியும்.

2) தற்காலிகமாக பணியில் ஈடுபடுத்தப்படும் 03 நபர்களுக்கு நடப்பு நிதியாண்டில் 2026-27ல் ஓராண்டு காலத்திற்கு 16.09.2026 முதல் 15.09.2027 வரை ஆகும் ஊதிய செலவினத் தொகையான நாள் ஒன்றுக்கு ஊதியம் 762 X 365 days X 03 = ரூ.8,34,390/- (ரூபாய். எட்டு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து முந்நூற்று தொண்ணூறு மட்டும்) வழங்க, கணக்கு குறியீடு எண்.30-32-02 மற்றும் கணக்கு தலைப்பு எண். 210-100-602ல், கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய, நிதி நிர்வாகப் பிரிவுக்கு அனுமதியும்.

3) சுய உதவிக் குழுக்களின் (SHG) மூலம் தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையிலும் (ம) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு (J1) துறை, அரசாணை 2(D) எண்: 36 நாள்: 16.06.2023-* பெருநகர சென்னை மாநகராட்சியில் அமல்படுத்தவும் மற்றும் அரசிதழில் குறிப்பிட்டுள்ளவாறு தினக்கூலி பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் Explanations || (1) ii-ன்படி முந்தைய ஆண்டின் சராசரி (Consumer Price Index) அடிப்படையில் அகவிலைப்படி உயர்த்தி ஏப்ரல் முதல் நாளிலிருந்து ஊதியம் வழங்க அனுமதியும்.

4) மேற்கண்ட பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வழியாக 03 நபர்களை சுகாதாரப் பணியில் ஈடுபடுத்த ஓராண்டு காலத்திற்கு 16.09.2026 முதல் 15.09.2027 வரை தற்காலிக தினக்கூலி அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள அனுமதியும்.

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 18.09.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 24.09.2026 அன்று தீர்மான எண்.081/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

“ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் கூட்டம் 22.09.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டும் பெரும்பான்மை உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் முடிவடைந்த நாளிலிருந்து தொடர்ச்சியாக பணிபுரிய அனுமதிக்காமல் இடைவெளிவிட்டு பின்னர் தற்காலிக பணியாளர்களை பணிபுரிய அனுமதிக்கலாம் என்ற நிபந்தனையுடன் தீர்மான எண்.178/2026, நாள்.24.09.2026-ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.சே.து.ந.க.எண்.பயிற்சி/எப்20/1926/2026**

**ஆணையர் அவர்களின் 22.09.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 326/2026** **பொருள் எண்.19**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மருத்துவ சேவைகள் துறை - பயிற்சி பிரிவு - தனியார் பள்ளி மற்றும் கல்லூரியில் பயிலும் செவிலிய மாணவிகளுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைகள் துறையில் உள்ள மருத்துவமனைகளில் பயிற்சி பெற கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது - அரசாணை என்.778 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் (MCA-2) துறை நாள் 06.07.2026ன் படி இக்கட்டணம் திருத்தியமைக்கப்பட்டது - இவ்வரசாணையினை பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்படுத்த மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையின் கீழ் இயங்கும் நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர சமுதாய சுகாதார மையங்கள் மற்றும் 24 மணிநேர மருத்துவமனைகளில், தனியார் செவிலியர் கல்லூரி மற்றும் செவிலிய பள்ளிகளில் பயிலும் செவிலிய மாணவிகள் பயிற்சி பெற *GO (D)* எண். 738, சுகாதாரம் மற்றும் குடும்ப நலன் *(PME.1)* துறை, நாள்.20.08.2020-ன்படியும் மற்றும் மன்றத் தீர்மான எண்.593/2024, நாள். 30.12.2024-ன்படியும் கட்டணம் கீழ்கண்டவாறு வசூலிக்கப்பட்டுவந்துள்ளது,

**அட்டவணை - I**

| வ.எண் | *GO* எண் & தேதியிட்டது | நோக்கம் | பாடநெறி | திருத்தப்பட்ட கட்டணம்(ரூ) |
|---|---|---|---|---|
| *1* | *GO. (D)* எண். 738, மற்றும் குடும்ப நலன் *(PME-1)* துறை, தேதி: 20.08.2020. | அரசு மருத்துவமனையில் மருத்துவப் பயிற்சி அளிப்பதற்காக | டிப்ளமோ (நர்சிங்) | ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு ரூ. 1,500/- |
| *2* | *GO. (D)* எண். 738, மற்றும் குடும்ப நலன் *(PME-1)* துறை, தேதி: 20.08.2020. | அரசு மருத்துவமனையில் மருத்துவப் பயிற்சி அளிப்பதற்காக | பி.எஸ்சி. (நர்சிங்) | ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு ரூ. 3,000/- |
| *3* | *GO. (D)* எண் 738, மற்றும் குடும்ப நலன் *(PME-1)* துறை, தேதி: *20.08.2020.* | அரசு மருத்துவமனையில் மருத்துவப் பயிற்சி அளிப்பதற்காக | எம்.எஸ்.சி. (நர்சிங்) | ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு ரூ. 6,000/- |

அரசாணை எண்.*778*, சுகாதாரம் மற்றும் குடும்ப நலன் *(MCA-2)*, நாள்.*06.07.2026*-ன்படி தனியார் செவிலியர் கல்லூரி மற்றும் செவிலியர் பள்ளிகளிலும் பயிலும் செவிலிய மாணவிகள் பயிற்சி பெற கட்டணம் கீழ்கண்டுள்ளவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

<u>அட்டவணை -II</u>

| வ.எண் | GO எண் & தேதியிட்டது | நோக்கம் | பாடநெறி | திருத்தப்பட்ட கட்டணம்(ரூ) |
|---|---|---|---|---|
| 1 | GO. (D) எண் 778, மற்றும் குடும்ப நலன் (MCA-2) துறை, தேதி: 06.07.2026. | அரசு மருத்துவமனையில் மருத்துவப் பயிற்சி அளிப்பதற்காக | நர்சிங் டிப்ளமோ | ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு ரூ. 3,000/- |
| 2 | GO. (D) எண் 778, மற்றும் குடும்ப நலன் (MCA-2) துறை, தேதி: 06.07.2026. | அரசு மருத்துவமனையில் மருத்துவப் பயிற்சி அளிப்பதற்காக | பி.எஸ்சி. (நர்சிங்) | ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு ரூ. 6,000/- |
| 3 | GO. (D) எண் 778, மற்றும் குடும்ப நலன் (MCA-2) துறை தேதி: 06.07.2026. | அரசு மருத்துவமனையில் மருத்துவப் பயிற்சி அளிப்பதற்காக | எம்.எஸ்சி. (நர்சிங்) | ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு ரூ. 7,500/- |

GO. (D) எண் 778, சுகாதாரம் மற்றும் குடும்ப நலன் (PME.1) துறை, 06.07.2026 நாளிட்ட அரசாணை பெருநகர சென்னை மாநகராட்சியில் 30.07.2026 அன்று கிடைக்கப்பெற்றது. இவ்வராசாணையின் நகல், ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி என குறிப்பிடப்படாததால், இவ்வரசாணை சென்னை மாநகராட்சியில் பெறப்படவில்லை. எனவே, இவ்வரசாணை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பொருந்துமா என பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை இயக்குனரகத்திற்கு நேரில் சென்று விசாரித்ததில் அரசாணையில் பெருநகர சென்னை மாநகராட்சி என குறிப்பிடப்படாததால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தெரிவிக்கப்படவில்லை என உறுதி செய்யப்பட்டது.

GO.(D) எண் 778, சுகாதாரம் மற்றும் குடும்ப நலன் (PME.1) துறை, 06.07.2026 நாளிட்ட அரசாணை 30.07.2026 அன்று காலதாமதமாக பெறப்பட்ட நிலையில் இவ்வரசாணை வெளியிடப்பட்ட நாளான 06.07.2026 முதல் உயர்த்தப்பட்ட பயிற்சி கட்டணம் திருத்தியமைக்கப்பட்ட பயிற்சி கட்டணத்தின்படி மருத்துவ செவிலிய கல்லூரிகள் மற்றும் பள்ளிகளிடமிருந்து வசூலிக்கப்படவேண்டியுள்ளது,

எனவே,

| | |
|---|---|
| அ) | அரசாணை எண்.778, பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள்: 06.07.2026ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் 06.07.2026 முதல் செயல்படுத்தவும், |

| | |
|---|---|
| ஆ) | அரசாணை எண்.778, பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள்:06.07.2026-ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர சமுதாய சுகாதார மையங்களில் பயிற்சி மேற்கொள்ளும் தனியார் செவிலியர் கல்லூரிகளிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய திருத்தியமைக்கப்பட்ட கட்டண விகிதத்தை 06.07.2026 முதல் அட்டவணை II-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தொடர்ந்து வசூலிக்க அனுமதியும், |

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 18.09.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 24.09.2026 அன்று தீர்மான எண்.082/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் கூட்டம் 22.09.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 24.09.2026 அன்று தீர்மான எண்.179/2026-ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ICCC.D.C.No.27/2026**

**ஆணையர் அவர்களின் 22.09.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 327/2026** **பொருள் எண்.20**

**பெருநகர சென்னை மாநகராட்சி - ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (ICCC) - ஒருங்கிணைந்த ICCC தொடர்ச்சி மற்றும் ICCC 2.0 ஒருங்கிணைப்பு திட்டம் - "தற்போதைய ICCC மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட ICCC 2.0 திட்டக் கூறுகளின் இயக்கம், பராமரிப்பு, தேவைக்கேற்ப தொழில்நுட்ப மேம்படுத்தல் மற்றும் தொடர்ச்சி ஆதரவு ஆகியவற்றை 5 ஆண்டுகளுக்கு வழங்குதல்" பணிக்கான System Integrator-ஐத் தேர்வு செய்தல் - நிர்வாக அனுமதி, நிதி ஒதுக்கீடு மற்றும் திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி.**

***Integrated Command and Control Centre (ICCC)***ஆனது *Smart Cities Mission* திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு குடிமைச் சேவைகளை மையப்படுத்தப்பட்ட முறையில் கண்காணித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிறுவப்பட்டது. இது **டிசம்பர் *2020*-ல் *Go-Live*** செய்யப்பட்டது.

